புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ மார்ச்சு ௴ 1௳ [ந. 33.

பிரஸங்கம் XXXIII.

## நாஸியின் சட்ட கொள்கை.

நாஸிகள் தங்கள் தலைவனான ஹிட்லரின் ஆக்ஞைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். தலைவன் நாஸிக் கக்ஷிகளுக்கு ஆக்ஞையிடுவதோடுமட்டும் நிற்பதில்லை. ஜெர்மன் ராஜ்ஜியம் முழுவதிற்கும் ஆக்ஞைகள் இடுகிறான். அவைகள்தான் அந்த ராஜ்ஜியத்திற்குச் சட்டங்கள். நீதிபதிகளும் தண்டபதிகளும் அந்த ஆக்ஞைகளைத்தான் செலுத்தவேண்டும். சில சமயம் நியாய சபைகளின் தீர்மானங்கள் இல்லாமலே தண்டனைகள் கொடுக்கப்படும். அவ்வாறு தண்டனை கொடுக்கலாமென்றாவது விளம்பரப்படுத்தப்பட்ட ஆக்ஞை இராது. "கள்ளப் போலீஸாரும்" (S. S. Men) "புயல் சேனையும்" (S. A. Troops) தண்டனையை விதித்துச் செலுத்துவார்கள். அது தலைவனின் இஷ்டம் என்றும், மற்ற உபதலைவர்களின் எண்ணம் என்றும் ஏதாவது ஒரு சாக்குப் போக்கைச் சொல்லிக்கொள்வார்கள். ஆகவே, ஜெர்மனியில் தற்காலம் நடத்தப்பட்டு ஸர்வ ஜனங்களாலும் உத்ஸாகத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் நியாய பரிபாலனம் ஹிட்லர் என்ன அவனுடைய பரிவாரங்கள் என்ன இவர்களால் இடப்படும் ஆக்ஞைகளே.

இம்மாதிரியான ஆக்ஷி ஜெர்மனி தேசத்துக்கு நூதனமல்ல. 1226-ம் ௵த்தில் கான்றாட் என்ற கோமகன் தன்னால் அடக்கமுடியாத ஒரு பாளையக்காரனை அடக்குவதற்காக டியூடன் போர்வீரர்களை அழைத்ததிலிருந்து, நாளது தேதி வரை ஜெர்மனியில் ராணுவ ஆக்ஷியே நடந்துவந்திருக்கிறது. இந்த ராணுவ

ஆக்ஷியை "பிரஷ்ய ராஜ்ஜியபாரம்" என்று சொல்லுவார்கள். அதில் நியாயம் அளிப்பது ஜனங்களை அடக்குவதிலும், ராணுவ ஸ்வேச்சாதிகாரத்தை நிலைநிறுத்து வதிலும் ஈடுபட்டிருந்தது. 1660-ம் வருஷத்திலேயே பிராண்டன்பர்க் பிரபுவால் ஒரு நிலைத்த சைனியம் ஏற்படுத்தப்பட்டது. மஹாபிரடரிக் அந்த ஸமஸ்தானத்தை ஒரு பெரிய ராணுவ யதேச்சாதிகாரங்கொண்ட ஸமஸ்தானமாக் கினார். ஹீகல் என்ற தத்துவசாஸ்திரி ராணுவ ஆக்ஷிகொண்ட பிரஷியாவை ஆக்ஷிதத்துவத்தின் பிரமாணமாகக் கொண்டு அதன் மஹிமையைப் புகழ்ந்தார்.

ஆகையால், 1921-ம் வருஷ முதல் ஜெர்மனி தேசம் முழுவதும் "ஜெர்மனே! எழுந்திரு," "நான் ஸுதந்திரத்தின்மேல் காரி உமிழ்கிறேன்", "ஜனநாயகம் ஒழிக" என ஒலித்து பிரதி ஒலித்த காலத்தில், நாஸி கக்ஷியின் சட்டங்களை ஆக்ஞைகளாக சிரமேற்கொண்டு கீழ்ப்படியவேண்டும் என்று நினைத்து அப்படி கீழ்ப்படிவதில் ஒரு பெரிய உத்ஸாகம் கொண்டு ஜெர்மன் இளைஞர்கள் களித்தது வியக்கத்தக்கதல்ல.

இவ்வாறு நிராக்ஷேபணையாக கீழ்ப்படிந்து பரவசம் கொள்வதற்காக நாஸித் தத்துவத்தை ஒரு பெரிய சமயக் கொள்கையாகச் செய்யவேண்டியது அவசியமாக இருந்தது.

ஹான் கெரல் என்பன் ஹிட்லரை கடவுளின் உண்மையான பரிசுத்த ஆவி என்றான். நெறிதவறின ஹிம்லர், கோயரிங், கோயபல்ஸு முதலியவர்களை ஏசு கிறிஸ்து நாதருடைய புண்ணிய சீடர்களுக்கு ஒப்பிட்டான்.

சொல்லுகிறார் ஹிட்லர் ஒருசமயத்தில், "நம்முடைய ஜனங்கள் ஒரு விஷயத்தை நிச்சயமாகத் தெளிந்து தீர்மானித்துக்கொள்ளவேணும். நம்முடைய ரத்தத்திலும், நம்முடைய வாழ்க்கையிலும், நம்முடைய தேசத்திலும், இயற்கையிலும் நம் வலிமைகொண்ட வீர்ய விசுவாஸத்தை வைப்பதா? அல்லது பேடித்தனமான பரிதாபங்கொண்ட யூத கிறிஸ்துவின் மதத்தைக்கொள்வதா என்று நிச்சயம் செய்யவேண்டும். ஒருவன் ஜெர்மனா அல்லது கிறிஸ்துவனா என்பது தான் கேள்வி. ஒருவன் இரண்டும் கலந்து வாழமுடியாது".

நாஸி கொள்கைகளே தர்ம சாஸ்திரங்களாயின. கிறிஸ்துவரின் வேதம் புறக்கணிக்கப்பட்டது. தேசத்திலுள்ள ஜனங்களும் தலைவர் என்றும், மந்தைகள் என்றும் இருவிதமாக வகுக்கப்பட்டார்கள். தலைவர்கள் உத்தரவிடவேண்டியது. மந்தைகள் பதில் சொல்லாமல் கீழ்ப்படியவேண்டியது. ஹிட்லரும் அவருடைய பரிவாரமும் ஒரு அந்தரங்க சபை.

ஹிட்லருடைய உத்தரவும், அவருடைய ஆட்களுடைய உத்தரவும் வேதங்களின் பிரமாணத்தைக் கொண்டனபோல் கருதப்படவேண்டும்.

சட்டத்தின் ஆஸ்பதம் தலைவர், சில சமயம் அவனுடைய கையாட்கள், அவர்களின் உத்தரவுகளுக்கு யாதொரு சட்ட ஆதாரம் கிடையாது. பிற்பாடு

சட்ட அங்கீகாரமும் கிடையாது. அதைப்பற்றி யாதொரு பிரஜையும் நீதி மன்றத்தில் வியாஜித்துப் பரிகாரம் பெறமுடியாது.

நாஸிகளுடைய கொள்கையின்படி ஸமஸ்தானத்தை ஆக்ஷிபுரியும் கக்ஷியின் சாதனமாக சட்டமிருக்கவேண்டும். அரசுபுரியும் கக்ஷிக்கு பிரதிகக்ஷி இருக்கக் கூடாதென்று நினைத்தால், சட்ட விதிகளும், அவைகளை வைத்து அமுல் நடத்துகிறவர்களும் எதிர்கக்ஷி இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது. இவ்வாறு ஜனங்கள் ஒன்று சேர்ந்து அபிப்பிராயத்தை வெளியிடும் சுதந்திரம் ஜெர்மனியில் ஒழிந்தது. தேசியத்தை வளர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு நாஸிகள் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ளச் சட்டத்தை உபயோகித்துக்கொண்டார்கள்.

இவ்வாறாக ஜெர்மனியில் அடிப்படை சுதந்திரங்கள் அழிக்கப்பட்டன. மதம், நெறி முதலிய கட்டுப்பாடுகளில்லாததோடு, எல்லா நாகரீக கட்டடங்களின் தாத்பரியமாய் விளங்கும் ஆஸ்திகமும் நன்னெறியும், பொதுஜன நன்மையும் ஜெர்மன் சட்ட நிர்மாணத்தில் சற்றேனும் உபயோகப்படுத்தப்படவில்லை.

ஜனநாயகம் உண்மையில் பயனும், நன்மையும் பயக்கக்கூடிய சட்டங்களை செய்யவல்ல சாதனம்தானாவென்று சென்ற நூற்றாண்டு முதல் ஒரு சந்தேகமும் சில சமயம் விவாதமும் இருந்திருக்கிறது. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் சபைக்கு அரசை மாற்றினதால் அறிவைத்தள்ளி அறியாமையை சிம்மாசன மேற்றினதாயிற்றென்று சில நியாய சாஸ்திரிகள் வருந்துகிறார்கள். அதற்கு முன்னரே ஆங்கில அரசியல் தத்துவ நிபுணரான பர்க்கு என்பவர் பாமர ஜனங்களுக்கு சட்ட நிர்மாண சக்தியையளிப்பதைப்பற்றி திகிலடைந்திருக்கிறார். அவர் போன்ற சாஸ்திரிகளின் அபிப்பிராயம் என்னவென்றால், பொறுக்கி எடுத்த சிலர், புத்தியும், திறனும், நீதியும் கொண்டவர்கள் சட்டத்தை நிர்மிக்க முடியுமென்றும், அக்குணங்கள் கொண்டவர்களை தேர்ந்தெடுப்பது வாக்காளர்களால் ஸாத்தியம் என்பது ஸந்தேகமென்பதே.

ஜன நாயகம் உசிதமான காலத்தில் உசிதமான ஜனங்களுக்கு நன்மையை கொடுக்க முடியாவிடினும், இருக்கும் தீங்குகளை ஒழிக்கக்கூடிய வலிமையுள்ளது என்கிற அளவுக்கு ஜன நாயகத்தை அங்கீகரிக்கிறார்கள். ஆனால், அரசியலிலும், நீதியிலும் தகுந்த கல்வியை ஜனங்களிடம் பரப்பினால் மனோவிசாலம் அடைந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட நிர்மாண ஸமர்த்தர்களைகொண்ட சபையை ஸ்தாபிக்கும், மனோரதம் பூர்த்தியாகிவிடும் என்று நம்புகிறார்கள். ஜன நாயகத்தின் சட்டங்கள் இன்னும் குறைவுள்ளதாகவும் நிறை குன்றியதாகவும் இருந்தால், அது மனிதனுக்கே இயற்கையிலேயே ஏற்பட்ட வரம்புகளேயல்லாது, அக்குறைகள் நம்மால் அகற்றக்கூடியவையல்ல. ஜன நாயகத்துக்குப் பதிலாக சுயேச்சாதிகாரம் நலமென்று ஏற்றுக்கொள்பவர்கள் ஒருவருமில்லை. ஒருக்கால் சுயேச்சாதிகாரத்தின் சில கொள்கைகளை ஜன நாயகம் ஏற்றுக்கொள்ளலாமோ என்ற அஞ்ஞானம் சிலருக்கிருக்கலாம்.

சட்டத்தின் தாத்பர்யம் ஸமூகத்திலுள்ள தகரார்களை தீர்ப்பதானல், சட்டத்தின் விவரணம் ராஸ்கோ பவுண்டு என்பவர் செய்திருக்கிறபடி உண்மையானல்; அதாவது "பொது க்ஷேமத்துக்காக, யாவருடைய க்ஷேமத்திலும் எவ்வளவு சிறிய அளவுக்கு தியாகம் செய்யமுடியுமோ அதைத் தியாகம் செய்து ஒவ்வொருவருக்கும் முடிந்த மட்டும் அதிகமாக க்ஷேமத்தை கொடுக்கும்படி நிறைகாக்கும் தர்மமே சட்டம்" என்பது, உண்மையானல், நாஸி சட்டமானது மேற்படி விவரணத்துக்கு நேர் எதிரிடையானது. ஒவ்வொருவரின் அக்கரைகளை ஸமரஸப்படுத்துவதென்பதே கிடையாது. ஏனெனில் தனிப்பட்ட ஒரு மனிதனையோ அவனுடைய அக்கரைகளையோ, நாஸி ஒரு திருணமாக நினைக்கிறன். நாஸியின் நினைவும் கவலையும் தன் கக்ஷியேயன்றி வேறென்றும் கிடையாது. இந்த ஸர்வாதிபத்யம், தனி மனிதனின் க்ஷேமத்தை ஒழிப்பது, ஹிட்லர் நினைத்தவாறு கோரரூபமான தேசியம் இவைகள் தான் நம் நூற்றாண்டின் சுயேச்சாதிகாரம் தந்த பலன். நாஸியம் என்பது 20-வது நூற்றாண்டின் வலிப்பு என்று ஜெர்மானிய ரவுஷ்னிங் என்பவர் சொன்ன கண்டனம் வெகு லேசானது.

சட்டமென்பது நன்மையுள்ளதும், பிறரைத் திருத்தக்கூடியதும், மனிதனுடைய இயற்கையையும், ஸம்பந்தத்தையும் திறப்படுத்தக்கூடியதுமாகயிருப்பதானல், சட்டம் மனிதர்களின் அக்கரைகளை காக்கவேணுமானல், அந்த விஷயம் சட்டத்தின் உள்ளத்தைப் பொறுத்ததே ஒழிய, அதன் ஸ்வரூபத்தையாவது, அதன் கட்டுப்பாட்டையாவது பொறுத்ததல்ல. ஆனல் சட்டத்தில் நன்னெறியும் முன்னேற்றமும் அடங்கியிருக்கவேணுமானல், அந்த நன்னெறியை சட்டம் இழக்கமுடியாமல் செய்யவேணுமானல், அச்சட்டத்தை சிருஷ்டித்து ஊர்ஜிதப்படுத்தும் சட்டநிர்மாண யந்திரத்தைப் பொறுத்தது. ஒரு ஸர்வாதிகாரியின் சட்டம் எல்லா ஜனங்களுக்கும் எல்லா காலங்களிலும் நன்மையாகயிருப்பது சாத்தியமில்லை. ஒரு சுயேச்சாதிகாரியின் சட்டம் நன்மையா இல்லையாவென்று அளப்பதற்கு அளவுகோல் எது? ஒரு சுயேச்சாதிகாரி அந்த அளவை மீறுமல் தடுப்பதற்கு என்ன கட்டுப்பாடு இருக்கிறது? சாமூஹத்தின்பேரால் லெனினும், இஸ்டாலினும், தேசிய சாமூஹத்தின்பேரால் ஹிட்லரும் செய்த தற்காலத்திய பரீக்ஷைகள் வெகு பிரயோஜனமற்றவையாகிவிட்டன. ஏனெனில் ஒரு தனிப்பட்ட தலைவனுக்குத் தம் சட்டநிர்மாண சக்தியைவிட்டுக் கொடுக்காமல் வைத்துக் கொள்ள வல்ல சட்ட நிர்மாண யந்திரமில்லாமல் போனதுதான் காரணம். அதோடு சட்டம் செய்வதில் நன்னெறியையும், பொதுஜன க்ஷேமத்தையும் பிரமாணமாகக் கொள்ளாததாலும் அவர்களின் பரீக்ஷைகள் வியர்த்தமாயின. முக்கியமாக நாஸி ஒரு ராக்ஷஸனுகி விட்டான். அவனுக்கு சட்ட வரம்பின்மையே சட்டம். தான் ஸ்திரமாகயிருந்து ஓங்கி வளருவதற்குப் புரக்ஷி துயர்ந்து இருப்பதே நலமெனக் கருதி புரக்ஷியையே தன் லக்ஷியமாகக் கொண்டிருக்கிறன்.

சட்டப்படி ஆளுகையில் ஹிட்லருக்குள்ள இழிவுக்கு ஒரு உதாரணத்தை இங்கு எடுத்து காட்டுவது உசிதம். நாஸிக் கக்ஷியார் ஆக்ஷியைக்கைப்பற்றிக் கொண்டு ஹிட்லர் ஸமஸ்தானத்தலைவராக ஆனபிறகு, பழைய குடியரசு சட்டம் ஸமஸ்தான சட்ட புஸ்தகங்களிலிருந்து விலக்கப்படாமலிருந்தது. நாஸிக் கக்ஷி

யில் சிலர் கூட தாம் செய்யும் காரியங்களுக்கு சட்ட ஆதாரமிருப்பது நலமென்று நினைத்து நாஸி சட்டங்கள் செய்து பிரசுரப்படுத்தவேணுமென்று ஹிட்லரை கேட்டார்கள்.

ஹிட்லர் அந்த பிரார்த்தனையை நிராகரித்தான். 'எந்த க்ஷணத்தில் இப் புதிய பதவி சட்ட பூர்வமாக ஸ்திரப்படுத்தப் படுகிறதோ அந்த க்ஷணமே அதன் புரக்ஷிவன்மை குன்றி அதற்குள்ள உசித காலத்துக்கு முன்னால் புரக்ஷியின் சிருஷ்டி சக்தியைத் தடுக்காமலிருப்பதற்காக புரக்ஷி நிலைமையை எவ்வளவு காலம் நிலைநிறுத்த முடியுமோ அவ்வளவு காலம் அதை அனுமதிக்க வேணும். சட்ட சாஸ்திரிகளும், சட்ட நிர்மானிகளும் சட்ட ஸம்ஹிதை களாலும், ஆக்ஷி திட்டத்தாலும் உயிர் உண்டாக்கலாமென்ற ஒரு அடிப்படை யான தவறைச் செய்தார்கள். சட்ட நிலைமைக்கு வெளியில்தான் உண்மை வாழ்க்கை நடக்கும்' என்று ஹிட்லர் சொன்னான்.

ஹிட்லர் சொல்லியிருக்கும் மேற்படி வாக்குமூலம் ரவுஷ்னிங் அறிவித் திருக்கிறபடி உண்மையானால் 20-வது நூற்றாண்டில் சர்வவிதமான ஹிம்ஸை களையும் கொடிய செயல்களையும் செய்து ஒரு பெரிய ராஜ்ஜியத்திற்குத் தலைவனாக வந்த ஒருவன் எவ்வளவு அலக்ஷியமும், பொதுஜன க்ஷேம விஷயத் தில் எவ்வளவு பொறுப்பின்மையும்கொண்ட குற்றவாளியாகயிருக்கிறான் என்பது விளங்கும். தம்முடைய சக்தியை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக நாஸிகள் சட்டத்தை உபயோகிக்கிறார்கள் என்று சொல்வது பூரா உண்மையாகாது. புரக்ஷிக்காகவே புரக்ஷியை ஹிட்லர் வேண்டுகிறான். "அதன் சிருஷ்டி சக்தியை அதன் உசிதகாலத்திற்கு முன்னால் குறைக்காமல் துயர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும்." இவ்வாறாக ஹிட்லர் மானிடத்திற்கும், நாகரீகத்திற்கும் மானிட ஸமூகத்தின் ஒழுக்கத்திற்கும் எதிரியாக நிற்கிறான்.

இந்த கொடுங்கோன்மையுடனும் சட்டமில்லா ஆக்ஷியுடனும், பக்ஷபாத மின்றி நியாயம் வழங்கவேண்டிய நீதிபதிகள் எவ்வாறு ஒத்துழைக்க முடிந்தது என்று நீங்கள் கேட்கலாம்.

ஜெர்மனியில் சென்ற யுத்தத்திற்கு பிறகு மன்னராக்ஷி முறிந்து குடியரசு கொண்டபிறகு, லைப்ஸிக் என்ற பட்டணத்திலிருந்த ரைஸ்ஜெரிஸ்ட்டு என்ற உயர் நீதி மன்றத்திலிருந்த நீதிபதிகள் இப்புதிய ஆக்ஷியின் பரம விரோதிகளாயிருந்தார் கள். அவர்கள் குறிப்பிட்ட குற்றங்கள் செய்திருந்தாலொழிய அவர்களை விலக்க முடியாதென்ற விதியிருந்ததால் அவர்கள் தைரியத்துடன் அவ்வாறு நடக்க முடிந்தது. பழைய அரசியலில் நியமிக்கப்பட்ட நீதிபதிகளை குடியரசு ஸர்க்கார் விலக்கவில்லை. அதனால் அந்நீதிபதிகள் பழைய ராணுவ ஆக்ஷியின் சட்டங் களையும், மாமூல்களையும், ரகஸியமாக, துயர்ச்சியாக பாதுகாத்துக்கொண்டு வந்தார்கள். ஆகவே, குடியரசின் மேற்கண்ட அஜாக்கிரதையால், 1933-ஸு ஹிட்லர் அரசைப்பிடித்து கொள்ளுமளவும் சுமார் 14 வருஷங்களுக்கு ஜெர்மன் நீதி மன்றம் ஸர்க்கார் பேரில் ராஜவிசுவாசக் குறைவையும் ஜனநாயக ஆக்ஷியின் பேரில் அருவருப்பையும் உண்டாக்கி நாஸியின் கொள்கைகளை வளர்க்கும் ஏவா மக்களாக விளங்கிற்று.

1932-ம் வருஷத்தில் யோர்ன்ஸ்ட் ஆட்வால்டு என்ற ஒரு ஜெர்மானியன், "அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று அவர்களுக்குத் தெரியும்" என்று பெயர்கொண்ட ஒரு நாவல் எழுதியிருக்கிறான். அதில் குடியரசுகாலத்தில் நடந்த நீதிமன்றது அபவாதங்களை விஸ்தாரமாக எடுத்துரைத்து அவைகளின் உண்மையை ருஜூப்பிக்கிறதாகவும் பந்தயம் கூறியிருக்கிறார். ராஜாங்கத்தை உடைப்பதற்கு நீதிபதிகளே காரணமாக இருந்திருக்கிறார்கள். ஆனால், தாங்கள் செய்த அவிசுவாசமான காரியத்தின் பலன்கள் எவ்வாறு முடியுமென்று அவர்கள் அன்று தெரிந்து கொண்டிருந்தார்களாவென்று சரித்திராசிரியன் கண்டு பிடிக்க வேண்டும். ஜெர்மனியில் இன்று நடக்கும் காரியங்களை அவர்கள் அப்பொழுதே அறிந்திருக்க முடியாதென்றால், "அவர்கள் என்ன செய்தார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது" என்றுதான் சொல்லவேண்டும்.

அவர்கள் செய்த சில சில தவறுதல்களின் சில உதாரணங்களை எடுத்துச் சொல்லலாமென்றால், அவர்கள் தொழிலாளித்துவம், சமூகம் இவைகளை கண்டித்தார்கள். தன் தோட்டத்திற்குள் ஆக்ரமித்திருப்பானோவென்ற "சந்தேகத்திற்காக ஒரு கூலியாளைச் சுட்டதற்காக ஒருபெரிய நிலக்காரரை விடுதலை செய்து, அது வேடர்களின் வழக்கம் என்று காரணம் சொன்னார்கள். குடியரசு பிரமுகர்களான எர்ஸ்பெர்கர், ராதினோ என்பவர்களைக் கொலை செய்ததற்கு சரியாக தண்டிக்கவில்லை. அபாயகரமான ஆயுதங்களை ரஹஸ்யமாக வஹிப்பதற்குள்ள தண்டனையை அதிகப்படுத்தி ப்ரூனிங் என்ற மந்திரி 1931-ம் வருஷம் மார்ச்சுமாதத்தில் ஒரு ஆஞ்ஞை பிறப்பித்தார். ஆயினும் "எவனொருவன் தன்னுடைய அரசியல் எதிரிகளிடமிருந்து சதா பயப்படவேண்டியிருக்கிறதோ அவன் சதா தற்காப்பிலிருப்பதால் அபாயகரமான ஆயுதம் தரிப்பது குற்றமாகாது" என்று 1932-ம் வருஷத்தில் உயர் நீதிமன்றம் ஸித்தாந்தம் செய்தது. ஆயுதம் தரித்த நாஸிக்கூட்டங்களின் காரியங்களை ஆதரிக்க இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. ஜெர்மன் சேனையின்பேரில் நீதியிலாகாவுக்கு இருந்த பக்ஷத்தை கவனித்தால், ஜெர்மன் சைனியம் எது செய்தாலும் நீதியிலாகாப்படி அநியாயமாகாது என்று சொல்வது மிகையாகாது. சமாதானக்கிளர்ச்சி கண்டிக்கப்பட்டது. மறுபடி ராணுவ ஆதிக்கத்தைப்பெற ஜெர்மன் ஸர்க்கார் செய்த எல்லாக்காரியங்களிலும் நீதியிலாகா ஒத்துழைத்தது. ஆயுத கிரஹணம் வெகு மும்முரமாகச் செய்யுங் காலத்திலேயே, ஆயுதங்களை செய்யவில்லை என்று ஒரு தோற்றம் ஏற்படுத்துவதற்காக, நீதி மன்றம் ஒரு நிலை நில்லாத அஸமஞ்சஸமான சட்ட ஸித்தாந்தத்தை சிருஷ்டித்தார்கள். வார்ஸெயில்ஸ் ஒப்பந்தத்தையும் பாரிஸ் நகரத்தில் வல்லரசுகளுக்குள் ஏற்பட்ட விமான ஒப்பந்தத்தையும் மீறி ஆஸ்ஸீட்ஸ்கி என்பவனும் க்ரைஸர் என்பவனும் குற்றம் செய்ததாக விசாரிக்கப்பட்டபொழுது, நீதி மன்றம் வெளியிட்ட ரகஸ்யத் தீர்ப்பில் பின்வருமாறு கண்டிருக்கிறது:—

"தேசியப் பாதுகாப்புக்காக இம்மாதிரியான (ராணுவ)ச் சீர்திருத்தங்கள் சட்டங்களுக்கு மேல்ப்பட்ட அத்தியாவசியதை ஆகச்சே அது வார்ஸெயில்ஸ் ஒப்பந்தத்திற்கும் விமான ஒப்பந்தத்துக்கும் விரோதமாயினும் நியாயம்தான்."

"சட்டத்திற்கும் மேல்பட்ட மூட்டுப்பாடு" என்ற விஷயம் எந்த நாகரீக சட்ட ஏற்பாட்டிலும் கிடையாது. அதைச்சாதாரண பாஷையில் சொல்வ தென்றால் "பிரஜையின்பேரில் ஸர்க்கார் சட்டமின்றி செய்யும் காரியம்" என்று பொருள். இதில் வெகு இழிவுகரமானதென்னவென்றால் இதை ஒரு சட்ட விதியாக நீதிகாப்போர் அனுஷ்டிப்பதுதான். நெறியழிவும், விதியின்மையும் இதற்கும் கேவலமாகப்போக முடியாது. சட்டத்திற்கு நீதி வரம்பில்லாததே கெடுதிதான். அப்படியில்லாததை நியாயம் என்று சொல்லி, அதை ஸ்திரப் படுத்தினால், அப்பொழுது விமோசனமே கிடையாது.

சட்டநிர்மாணத்திலிருந்து நீதி விஷயத்தை விலக்கினதற்கு ஆக்ஷேபித்தார் ஒரு டாக்டர் ஸீம்ஸ" என்பவர். அவரை உடனே கைது முகாமுக்கு அனுப்பி னார்கள். மதம், இலக்கியம், ஹாஸ்யம் இவைகளெல்லாம் நாஸியத்தை எதிர்த்த தற்காக கைது முகாமுக்கு அனுப்பப்பட்டிருந்த நீமாலர், ஷ்னீடர், வைகார்ட் பின்கு முதலிய தேசவீரர்களின் கூட்டத்தில் சேர்ந்தார்.

மதம், வேதாந்தம், இலக்கியம், இவைகளை அடக்கும் வரை ஸ்வல்ப்பகாலம் எல்லாம் சரியாகவே நடப்பது போலத்தோன்றும். ஆனால் எந்த க்ஷணத்தில் சட்டயந்திரத்தை தங்கள் சொந்த நன்மைக்காக உபயோகப்படுத்திக்கொண்டார் களோ அந்த க்ஷணமே தேசத்தின் ஜீவமூச்சே நின்றுவிட்டது. தான் செய்த தந்திரத்தாலேயே அந்தக்கக்ஷி மரணமடையும்.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் மனு சொன்ன சொற்கள் என்றும் சத்தியமானவை. இன்றும் சத்தியமாகவே முடியும்:—

धर्म एव हतो हंति धर्मो रक्षति रक्षितः ।
तस्माद्धर्मो न हंतव्यो मानो धर्मो हतोऽवधीत् ॥

தர்மம் தன்னைக் கொல்லுபவனைக் கொல்லுகிறது. தர்மம் தன்னை ரக்ஷிக்கிறவனை ரக்ஷிக்கிறது. உன்னால் நாசம் செய்யப்பட்ட தர்மம் உன்னைக் கொல்லாமலிருக்கவேணுமென்றால், நீ தர்மத்தை நாசம் செய்யாதே.

உலக தர்மத்தை மீறின ஜெர்மனி நாசம் செய்யப்படும். உலக தர்மத்தை காப்பாற்ற நிற்கும் பிரிடன் காப்பாற்றப்படும்.

திரு. சர்ச்சில் அவர்கள் 25—2—41-ல் ராஜிசெய்கிறோமென்று சொன்ன ஜப்பானுக்குச் சொன்னபடி "உலகத்திலுள்ள மானிடம் முழுவதிற்குமாக இங்கி லாந்து போர்புரிகிறது. ஆகையால் ராஜி என்பது முடியாது."

# வார யுத்தச் செய்திகள்.

(20—2—41 லிருந்து 26—2—41 வரை).

## இதாலிய ஸோமாலிலாண்ட் மொகடிஷு கைவசமாய்விட்டது.

'அடி, அடிக்குமேல் அடி, பலமாய் அடி' என்று லெப்டினன்டு ஜெனரல் கன்னிங்காம் போட்ட உத்திரவுப்படியே இதாலிய ஸோமாலிலாண்டில் யுத்தம் நடந்து வருகிறது. சில துளிகள் பெரு வெள்ளமாய்விட்டன. முதலாக, எல்வாக் பிடிக்கப்பட்டது. பிறகு, 100 மைலுக்கப்பாலுள்ள அப்மாடு கைவசமாயிற்று. இவைகளைப் பிடிக்க ஆகாய விமானங்கள் ஒத்துழைத்தன. கிஸ்மாயுவைப் பிடிக்க, கப்பற்படை உதவி செய்தது. ஜூபா நதியைக் கடந்த பிறகு, இதாலியரின் எதிர்ப்பு முறிந்துபோய் ஒன்றன்பின் ஒன்றாக, ஜூம்பே, பவாரா, காப்வென், கடைசியாக தலைநகராகிய மொகடிஷுவும் பிடிபட்டன.

**எரிடிரியா.**—மலைப்பிரதேசமானதாலும் நிலவெடிகளை எதிரியானவன் பாவியிருப்பதாலும் கெரனை மெள்ளமெள்ள அணுகவேண்டியிருக்கிறது. இதற்கு வடக்கே யிருக்கும் கப்-கப் என்ற ஸ்தலம் இந்த வாரத்தில் பிடிபட்டுவிட்டது.

**அபிஸீனியா.**—தேசாபிமானிகளின் சைனியம் இப்பொழுது ஒரு பக்காப் படையாகி, கஜ்ஜத்தில் சண்டை துவக்கிவிட்டது. என்ஜவாரா, பிகாலோ அப்பாய், ஷொகாலி என்ற இடங்கள் பிடிக்கப்பட்டன.

**லிபியாவில்,** ஜரபூப்பிராந்தியத்தில் பிரிடிஷ் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அது ஒரு யாத்திரை ஸ்தலமாதலால் ஜாக்கிரதையாய்ப் போகவேண்டியிருக்கிறது. மிஸ்டர் ஈடனும், ஸர்ஜான்டில்லும் இப்பொழுது கைரோவுக்கு வந்திருப்பதிலிருந்து வேறு காரியங்கள் துவக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மிஸ்டர் ஈடென் வரும்போதெல்லாம் பெரிய காரியங்களுக்குத் துவஜாரோகணமாகும்.

**அல்பேனியாவில்** சென்ற இரண்டு வாரங்களாக இதாலி 16 முறை படையெடுத்தும் பலிக்கவில்லை. சென்ற இரண்டு நாட்களாக சைனியத்தைப் பலப்படுத்திக்கொண்டு கோரிட்ஸாவுக்கும் பிளாரினுவுக்கும் மத்தியில் கிரேக்கர் வசமிருக்கும் இடங்களைத் தாக்குவதாகத் தெரிகிறது.

**மத்தியதரைக் கடல்.**—ஸிஸிலியில் ஜெர்மன் விமான்ங்கள் வந்ததிலிருந்து மத்தியதரைக் கடலில் அக்கப்போர் ஆரம்பித்திருக்கிறது. பிரிடிஷ் நீர்மூழ்கிகள் சமீபத்தில் ஏழு இதாலியக் கப்பல்களைக் கவிழ்த்துவிட்டன. ஸிஸிலியின் துறைமுகங்களாகிய கடானியாவும், காமிஸோவும் பிரிடிஷ் விமானங்களால் தகர்க்கப்பட்டன. மால்டாவைச் சுற்றிக் கடல் வெடிகள் போடப்பட்டு, அபாய

ஸ்தலமாய்விட்டது. கட்டாயப்போர் சேவை உத்தரவு மால்டாவில் போடப்பட்டிருக்கிறது. நாலு தினங்களாக மத்தியதரைக் கடலை வேவுபார்த்து வந்ததில் ஒருநாள் பிரிடிஷ் கப்பற்படை சில பாய்ச்சல் விமானங்களை முன்பு இல்லஸ்டிரியஸ் கப்பலைத் தாக்கிய இடத்தில் சந்தித்து விரட்டிவிட்டன.

வழக்கம்போல, மால்டாவில் ஒரு ஆஸ்பத்திரியையும், கடலில் ஒரு ஆஸ்பத்திரிக் கப்பலையும், இதாலியக் கைதிகளை லிபியாவிலிருந்து ஏற்றிவந்த மற்றொரு கப்பலையும் விமானங்களைக்கொண்டு ஜெர்மானியர் எதிர்த்துவிட்டார்கள்.

14-ம் தேதியன்று அஸோர்ஸுக்கப்பால் 14 கப்பல்களைக் கவிழ்த்துவிட்டதாக ஜெர்மானியர் சொல்லுவது சரியல்ல. அங்கு சென்ற 19 கப்பல்களில், 10 கப்பல்கள் பத்திரமாய் வந்து சேர்ந்துவிட்டன. 4 கப்பல்கள் திரும்பாமலிருக்கக்கூடிய காலமாகவில்லை. அமிழ்த்தப்பட்டது 5 கப்பல்கள்தான்.

**பால்கன் நாடுகள்.** ஜெர்மன் படையெடுப்புக்கு வேண்டிய முஸ்திப்புகள் தயாராயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. வழக்கம்போல், பிரிடிஷ் துருப்புகள் ஸலோனிகாவில் இறக்கப்பட்டிருப்பதாயும், பல்கேரியாவைப் பிடிக்க எண்ணம் கொண்டிருப்பதாயும் பிரிட்டன் குற்றம் சாட்டப்படுகிறது. படை யெடுக்கப் போவதாகச் சொல்லி கிரீஸைப் பயமுறுத்தி, சமாதானம் செய்து கொள்ளச் சொல்ல ஜெர்மனி யோஜிக்கலாம். இதாலியானது அல்பேனியாவில் வெற்றி யடையுமாவென்று பார்த்துக் கொண்டிருக்கலாம்; அல்லது டான்யூப் நதியில் வெள்ளம் அடங்காததும், பல்கேரியாவில் மழையினால் ரஸ்தாக்கள் வசதியில்லாதிருப்பதும் தாமதிப்பதற்குக் காரணமாயிருக்கலாம்.

**துருக்கி.** தனக்கு பிரிட்டனிடத்திலிருக்கும் பக்தியை, பகிரங்கமாய்ச் சொல்லுகிறது. தேசீய காரியங்களில் துருக்கி நிதானம் தவருதென்றும், மோசம் செய்யாதென்றும், மாருதென்றும், சொன்ன சொல் தவருதென்றும் துருக்கிப் பத்திரிகை இக்டம் எழுதுகிறது. துருக்கியின் பிரதம மந்திரியானவர் துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் அனுக்ரம ஒப்பந்த மேற்பட்ட போதிலும் பிரிடனுக்குக் கொடுத்திருக்கும் வாக்கு மாருதென்று சொல்லுகிருர்.

**தூர-கிழக்குப் பிரதேசம்.** இங்கே, மாட்ஸுவோகாவின் கூத்து வேடிக்கையாயிருக்கிறது. நாஸிகளைப்போல தானும் உலக அமைதியை நாடுவதாகச் சொல்லிக் கொண்டார். இந்த சமாசாரம், லண்டனில், மிஸ்டர் இஷியி என்ற ஜப்பானியராலும், மாட்ஸுவோகா ஈடனுக்கெழுதிய ஒரு தஸ்தாவேஜினலும், டொமாய் ஏஜன்ஸியாலும் வெளிப்படுத்தப்பட்டது. இவர் பேச்சிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இவர் சமாதானம் பேசப்போவதாகக் கருதப்பட்டது என்ன விந்தை! சைனவை ஆக்கிரமிக்கப் பார்க்கும் இந்தப் பூனை இந்து-சைனவுக்கு ஒப்பந்தமும் ஐரோப்பாவுக்கு சமாதானமும் பேசப்போவதாகச் சொல்லுகிறது.

இது நிற்க, இந்தப்பேச்சிலிருந்து தன் பலம் குறைந்து விட்டதாக உலகம் நினைக்குமென்று ஜெர்மனி பயந்து மாட்ஸுவோகாவைக் கோபித்துக் கொள்ள, இவர், தன்தேசத்து பார்லிமெண்டில், தான் பொதுவாக உலகத்தில் சமாதான மேற்பட வேண்டுமென்று சொன்னதைத் தவிர ஜெர்மனியைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை யென்று வியாக்கியானம் செய்தார். இவர் வியாக்கியானம் எப்படி இருந்தபோதிலும் சரி, இப்பொழுது பிரிடிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில், 'மண்ணாசை அல்லது பொன்னாசை அல்லதுவியாபார லாபத்தைக்கருதியல்லாது, உலகக்ஷேமத்தை முன்னிட்டு இந்த யுத்தம் நடப்பதால் ராஜிப்பேச்சென்பது கிடையாதென்று சொல்லிவிட்டார்.'

அப்படிச் சொல்லியும் மாட்ஸுவோகா வாயையடைத்துக்கொண்டு சும்மா இருக்கக்காணோம். அமெரிக்காவைப் பார்த்து மாயவலைக்குள் சிக்கக்கூடாதென்கிறார். ஆஸ்திரேலியாவைப்பார்த்து அமெரிக்காவுக்குக் கையாளாகக்கூடாதென்கிறார். ஆஸ்திரேலியாவின் ஆக்டிங் பிரதம மந்திரியும் 'தூரகீழ் தேசமென்று சொல்லப்படும் ஜப்பான் இப்பொழுது நமக்குச் சமீப வடதேசமாய்விட்டது. காட்டுத்தீயைப் பிடித்தவுடன் அணைத்துவிடவேண்டும்' என்று பதில் கொடுத்து விட்டார்.

ருஷ்யாவும், ஜப்பானும் பொருளாதார ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டனவாம். அனுக்கிரம ஒப்பந்தமொன்றும் செய்துகொள்ள ஸகேலியனின் தென் பாகத்தை ருஷ்யாவுக்குக்கொடுக்க ஜெர்மனி, ஜப்பானைத் தூண்டுகிறதாம்.

மீகாங் நதியின் தொங்கு பாலத்தை விமானங்களைக்கொண்டு உடைத்து பர்மா ரஸ்தாவில் போக்கு வரத்தை நிறுத்தி விட்டதாக ஜப்பான் சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால் நில யுத்தமல்லாது பழுதாக்கமுடியாது.

பிரெஞ்சு-இந்து-சைனாக்கடல்களில் ஜப்பானுடைய யுத்தக்கப்பல்கள் நிற்கக் கூடாதென்று ஆக்ஷேபித்து, ஜப்பான் மத்தியஸ்த்தத்தை விஷி அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை யென்றும், ஆர்மிஸ்டிஸ் ஒப்பந்தம் மார்ச்சு மாதம் 7-ம் தேதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாயும் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

**பிரிடன்.**—ஆகாயமார்க்கமாய் 21,000 மைல் பிரயாணம் செய்து, பாலஸ்தீனத்தையும், எகிப்தையும்பார்த்துவிட்டு, அங்குள்ள சைனியங்களையும், தலைவர்களையும் சந்தித்து விட்டு ஆஸ்திரேலியாவின் பிரதம மந்திரியாகிய மிஸ்டர் மென்ஸிஸ் இப்பொழுது லண்டன் வந்து சேர்ந்திருக்கிறார். இவர் இங்கு தங்கும் போது மந்திரிகள் சபை கூடும்போது கலந்து கொள்ளுவார். இவர் கீழ் வருமாறு ஒலிபரப்பியிருக்கிறார் :—

முழு மனதோடு, சாம்ராஜ்ஜியம் முழுவதும் இந்த யுத்தத்தில் ஈடுபடும். நீங்கள் தனியே நிற்பதாக நினைக்கவேண்டாம். இந்த தர்ம யுத்தத்தில் ஆஸ்திரேலியா மட்டுமல்ல, மற்ற சாம்ராஜ்ஜியநாடு ஒவ்வொன்றும் பிரிடனோடு நிற்கிறது.

லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும், நார்வே, பெல்ஜியம், ஹாலண்ட், போலண்ட் முதலிய அரசாங்கங்களுக்கு ஸ்தானிகர்களுக்கேற்பட்ட அந்தஸ்தைக் கொடுப்பதற்காக ஒரு மசோதாவை காமன்ஸில் ஸமர்ப்பிக்கும்போது மிஸ்டர் பட்லர் லண்டன் நகரமானது ஒரு சிறு ஐரேப்பாவாகவும், ஸ்வதந்திர-ஆலயமாகவும், கொடுங்கோலேத்தடுக்க தேசாபிமானிகள் கூடும் இடமாகவும் ஆகிவிட்டதாக எடுத்துக்காட்டினர்.

**அமெரிக்கா.**—பிரிடனுக்குதவி செய்யும் மசோதா இப்பொழுது ஊளார்க், வாண்டன்பர்க் போன்ற சில நபர்களால் எதிர்க்கப்பட்டு, மசோதா ஒரு சூதாட்டமென்றும், இரண்டாம் உலக யுத்தத்துக்கு யுனைடட் ஸ்டேட்ஸ் சேனைபதிகளின் தலைமை ஆபீஸாக ஆகிக்கொண்டிருப்பதாயும் ஆக்ஷேபிக்கப்பட்டது. மற்றும் சிலர் மசோதாவுக்குக் கட்டை போட்டு, தாமதிக்கப் பார்க்கிறார்கள். ஆனால், மசோதா இந்த வாரத்திலேயே அங்கீகரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜெர்மனியும், அது ஆக்ரமித்த நாடுகளும்.

1. நீர்மூழ்கிக் கப்பல்களால் அதிக நஷ்டத்தை ஏற்படுத்தப் போவதாயும், இனி யுத்தம் வலுக்குமென்றும், மத்தியதரைக்கடலின் சமாசாரத்தை இப்பொழுது தீர்த்துவிடப்போவதாகவும், வஸந்த காலம் வந்தவுடன் பிரிடனை பலமாய் எதிர்க்கப்போவதாயும் ஜெர்மனி ஒலிபரப்பிக்கொண்டிருக்கிறது.

2. யுனைடட் ஸ்டேட்ஸ் பொருளாதார நிபுணர்கள் இறைச்சி, கொழுப்பு, வைடமின்கள், லோகசத்து முதலிய உணவுகள் ஜெர்மனியில் இன்னும் ஒரு ஆறு மாதத்துக்குள் குறைந்துபோகுமென்று எதிர் பார்க்கிறார்கள்.

3. வஸந்த காலம் வந்தவுடன் பிரிடன் பலமாக விமானப்போரை ஜெர்மனிக்குள் நடத்தப்போவதாக ஜெர்மனியில் எச்சரிக்கை செய்யப்பட்டு வருகிறது.

4. ஹாலண்டில் காப்பிக்கொட்டை குறைவாய் விட்டதால் டியூலிப்பிலிருந்து ஒருவித கஷாயத்தை இறக்குகிறார்கள்.

**அச்சு நாட்டுத்தலைவர்களின் பிரசங்கங்கள்.**—சென்ற வாரத்தில் அரட்டலாயிருந்தது. இந்த வாரத்தில் வெறும் பேச்சாயிருக்கிறது. பாஸிஸ்ட் கக்ஷியைப் பார்த்துப் பேசும்போது முஸோலினி கீழ்க் கண்டவைகளைப் பற்றிச் சொன்னார் :—

1. 1922-ம் வருஷம் முதற்கொண்டே ஜனநாயக நாடுகளைத் த்வேஷிக்கிறேன்.

2. நான் சண்டைக்குத் தயாராயில்லை. ஆனால், சம்பவங்கள் என்னை நெருக்கிவிட்டன.

3. பிரான்ஸை நான் சண்டை செய்யாது பயமுறுத்தி வென்றேன்.

4. லிபியாவில் நான் படையெடுக்கு முன் பிரிடன் என்னை எதிர்த்து விட்டது.

5. இதாலியத் துருப்புக்கள் அல்பேனியாவில் வீரச்செயல்களைச் செய்கின்றன.

6. இதாலியின் சங்கற்பத்தால் யுத்தத்தில் வெற்றி வரப்போகிறது.

இந்த வீண் பேச்சுக்கு வியாக்யானம் வேண்டாம். தயாராயில்லாது, பிரிடனால் தோற்கடிக்கப்பட்டதை முஸோலினி ஒப்புக்கொண்டுவிட்டார். மல்லகசெட்டியின் அந்தியகால அழுகையென்றே இதை வைத்துக்கொள்ளலாம்.

இந்த வாரத்தில் கள்ளு-கிட்டங்கி (பீர் ஸெல்லர்)யில் ஹிட்லர் செய்த பிரசங்கத்தில் அரட்டலைத் தவிர மற்றொன்றையும் காணோம். வெர்ஸைல்ஸை வழக்கம்போல் வைதுவிட்டு, வஸந்த காலம் வந்தவுடன் நீர்-மூழ்கி யுத்தத்தை பலமாய் நடத்தப் போவதாகச் சொல்லிக்கொண்டார். பேச்சில் ஆர்ப்பாடமிருந்ததேயொழிய காரியத்தில் ஒன்றையும் காணோம். சென்ற இரண்டு நாட்களில் 2,15,000 டன் நிறையுள்ள கப்பல்களைக் கவிழ்த்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டார். அவருடைய ஆட்கள் பிற்பாடு இதை 2,50,000 டன்களென்றும் மாற்றிவிட்டார்கள். எல்லாம் பேத்தலாயிருக்கிறது.

---

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 17—2—41. (திங்கட்கிழமை). | | | |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | பாதுகார்த்தல்.—இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (Africa)வில் பல இடங்களிலும் முன்னேறும் சைனியங்கள். | நஷ்டமில்லை. | ...... |
| 18—2—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | ராணுவ முக்யமுள்ள இடங்கள்.—எரிட்ரியா (Eritrea)வில் கெரென் (Cheren). | ...... | சேதமாயிற்று. |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—காகாலே (Kakale). | ...... | 1 விமானம் எரிந்து போயிற்று. |
| | படையெடுத்தல்.—சண்டை நடக்கும் இடங்கள். | ...... | 2 விமானங்கள். |
| | ராணுவ முக்யமுள்ள இடங்கள்.—அபிஸீனியா (Abyssinia)விலுள்ள மேகா (Mega). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **18—2—41.** | (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | இதாலிய ஆபிரிக்கா **(Africa)**—தொடர்ச்சி. | | |
| | இதாலிய சைனியங்களின் தலைமை காரியாலயங்கள்.—*பார்டிரா* (Bardera) *விற்குத் தென்மேற்கே கெலிப்* (Gelib)-*ஜுபா* (Juba) *நதிக்கரையில்.* | ...... | *தீப்பிடித்தது.* |
| | பல இடங்கள்.—*இதாலிய ஸோமாலி லாண்டு* (Somaliland). | .. ... | ...... |
| | கோட்டை, கொத்தளங்கள், சைனியங்கள் வசித்துமிடங்கள், இராஜாங்க காரியால யங்கள்.—*அபிஸீனியா* (Abyssinia) *விலுள்ள யாவெல்லோ* (Yavello). | ...... *நஷ்டமில்லை.* | *பல இடங்களில் குண்டு வீழ்ந்தது. தீப்பிடித்தது.* 2 *விமானங்கள்.* |
| **19—2—41.** | (*புதன்கிழமை*). | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | கடற்படை நிலயம்.—*ப்ரஸ்ட்* (Brest). | ...... | ...... |
| | கப்பற்துறைகள்.—*கலே* (Calais). | *நஷ்டமில்லை.* | ...... |
| | அல்பேனியா **(Albania).** | | |
| | காவல் கார்த்தல்.—*ஆதன்ஸ்* (Athens) *நகரம்.* | ...... | ...... |
| | விரோதி சைனியங்கள், சாமான் ஏற்றிச் செல்லும் வண்டிக்கூட்டங்கள்.—*அல்பேனியா* (Albania). | ...... | *பலத்த சேதம்.* |
| | விமானச்சண்டை.—*சண்டை பிரதேசம்...* | ...... | 5 *விமானங்கள்.* |
| | இதாலிய ஆபிரிக்கா—**(Africa).** | | |
| | கட்டடங்கள், விமானக் கூடங்கள்.—*அஸ்மாரா* (Asmara) *விமான நிலயம்.* | ...... | 10 *விமானங்கள் பலத்த சேதம்.* |
| | மோட்டார் வண்டிகள் நிறுத்துமிடம், ரிபேர் செய்யுமிடங்கள்.—*அபிஸீனியா* (Abyssinia) *விலுள்ள டெஸ்ஸி* (Dessie). | ...... | *தீப்பிடித்தது.* |
| | ரஸ்தாக்களில் போய்க் கொண்டிருக்கும் சைனியங்கள்.—*அபிஸீனியா* (Abyssinia). | ...... | *பலருக்குக் காயம்.* |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—2—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுத்தல்—பிரெஞ்சு (French)க்கடற்கரை பிரதேசம் முழுவதும். | 2 விமானங்கள் | ...... |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | பல கட்டடங்கள், ராணுவ தளவாட கிட்டங்கிகள், மோட்டார்கள்.—பேராட் (Berat). | ...... | தீயும், வெடிகளும் கிளம்பின. 4 விமானங்கள் பலத்த சேதம். |
| | சாமான் கிடங்குகள், சைனியங்கள்.—டெபெலேனி (Tepeleni). | நஷ்டமில்லை. | 4 விமானங்கள். |
| | **ஸிஸிலி—(Sicily).** | | |
| | விமான நிலயங்கள், விமானக் கூடங்கள், பக்கத்திலிருக்கும் ரயில் பாதைகள்.—கடானியா (Catania), கோமிஸோ (Comiso). | நஷ்டமில்லை. | தரையிலிருக்கும் விமானங்கள் பல சாம்பலாயின. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | பாதுகார்த்தல்.—ஆபிரிக்காவில் பல போர் முனைகளிலும். | ...... | ...... |
| | தரையிலிருக்கும் விமானங்கள், பெட்றோல் தொட்டிகள்.—மஸாவா (Massawa). | ...... | பல விமானங்கள் சேதமாயின. பெட்ரோலில் தீப்பிடித்தது. |
| **21—2—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பல இடங்கள்.—வில்ஹெல்ம்ஷாவனி (Wilhelmshaven)லிருந்து ப்ரஸ்ட் (Brest)வரையுள்ள விரோதி, விரோதி ஆக்ரமித்துக்கொண்டிருக்கும் கடற்கரைகள். | ...... | பலத்தசேதம். பல இடங்களில் தீப்பிடித்தன. |
| | தொழிற்சாலைகள்.—மேற்கு ரூர் (Ruhr). | ...... | ...... |
| | விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland), பிரான்ஸ் (France). | 2 விமானங்கள். | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—2—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | சைனியங்கள்.—ஜுபா (Juba) நதிக்கரை. | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—கெலிப் (Gelib) பிரதேசம், மொகாதிஷு (Mogadishu)க்கு மேற்கே. | ...... | பலத்த நஷ்டம். |
| | தரையிலிருக்கும் விமானங்கள், விமான நிலயம், சாமான் கிடங்குகள்.—சினேல் (Chinile). | ...... | பலமாய்த் தாக்கப் பட்டது. |
| | ரயில்வே ஸ்டேஷன்கள், சைனியங்கள் வசிக்குமிடங்கள்.—டிரிடாவா (Dire-dawa). | ...... | சேதமாயின. |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—மஸாவா (Massawa). | ...... | ...... |
| | பெட்ரோல் தொட்டி.—ஆதி உர்கி (Adi-Urgi). | ...... | தீப்பற்றியது. |
| **22—2—41.** (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுத்தல்—பிரெஞ்சுக் (French) கடற்கரை முழுவதும். | 1 விமானம். | ...... |
| | விரோதி கடற்படை நிலயம்.—ப்ரஸ்ட் (Brest). | ...... | தகர்க்கப்பட்டது. |
| | **அல்பேனியா (Albania)** | | |
| | சைனியங்கள், மோட்டார் வண்டிகள்.—டெபலேனி (Tepeleni)க் கருகிலுள்ள புஸி (Buzi) பிரதேசம். | ...... | ...... |
| | விமானச்சண்டை.—ப்ரவிஸா (Preveza) பிரதேசம். | ...... | 3 விமானங்கள். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைனியக் கூட்டங்கள்.-இதாலிய ஸோமாலிலாண்டி (Somaliland) லுள்ள ஓபி (Obie). | ...... | துருப்புகளின் மேல் குண்டுமாரி பொழிந்தனர். |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—2—41** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | வேவு பார்த்தல்.—இதாலிய ஸோமாலிலாண்டி (Somaliland)லுள்ள கெலிப் (Gelib), பார்டிரா (Bardera) பிரதேசங்கள், அபிஸீனியா (Abyssinia), கென்யா (Kenya) எல்லைப் பிரதேசத்திலுள்ள மொயாலே (Moyale) பிரதேசம், அபிஸீனியா (Abyssinia) விலுள்ள மேகா (Mega) பிரதேசம். | ...... | ...... |
| | சைனியங்கள் தங்குமிடம்.—எல்வாக் (Elwak)குக்கும், மதீரா (Madera)வுக்கும் நடுவிலுள்ள டமாஸா (Damasa) ரஸ்தா. | ...... | ...... |
| | விமான நிலயம், கோட்டைகள், கட்டடங்கள்.—மஸாவா (Massawa). | ...... | 1 விமானம். தீப்பிடித்தது. |
| | மெஷீன் (Machine) துப்பாக்கி வைக்கப் பட்டிருக்கும் இடங்கள்.—ப்யூரி (Burie). | 1 விமானம். | ...... |
| **23—2—41** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கப்பற்துறைகள்.—கலே (Calais), ப்ரஸ்ட் (Brest), புலாயின் (Boulogne). | 1 விமானம். | பலத்த சேதம். தீப்பிடித்தது. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | டெபெலேனி (Tepeleni)-க்கு வடமேற்கே டுக்காஜ் (Dukaj). | ...... | கட்டடங்களும், விமானஞ்சுடும் பீரங்கிகளும் தகர்க்கப்பட்டன. |
| | இத்தாலிய சைனியங்கள் இருக்குமிடங்கள்.—ஸ்கும்பி (Shkumbi) பள்ளத்தாக்கு, எல்பஸான் (Elbasan), லின் (Lin), பொக்ராடெட்ஸ் (Pogradets) | ...... | இடைவிடாமல் தாக்கப்பட்டன. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—மோகாலே (Mokale). | ...... | 8 விமானங்கள் நாசமாயின, இன்னும் பல விமானங்கள் சேதம். |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 23—2—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி. | | |
| | விமானச் சண்டை.—மொகாலே (Mokale) | ...... | 1 விமானம். |
| | மோட்டார் வண்டிகள், கிட்டங்கிகள், சாமான் கிடங்குகள்.—அபிஸீனியா (Abyssinia) விலுள்ள நெகல்லி (Neghelli). | ...... | சேதமாயிற்று. |
| | மோட்டார் வண்டிகள்.—ப்ராவா (Brava) பிரதேசம். | 2 விமானங்கள். | 6 விமானங்கள் நாசமாயின. |
| | விமான நிலயக் கட்டடங்கள்.—அட்டிஸ் அபாபா (Addis Ababa) . | ...... | பல இடங்களில் சேதமதிகம். |
| | மோட்டார் லாரிகள்.—டெஸ்ஸி (Dessie), அலோமாத் (Alomath) பிரதேசம். | ...... | பலருக்குக் காயம். |

---

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 18—2—41 (செவ்வாய்க்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain) | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), தெற்கு, தென்கிழக்கு இங்கிலாந்தி(England)ல் சில இடங்கள். | ...... 2 விமானங்கள். | சொற்பச்சேதம் சிலருக்குக் காயம். |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம், கிழக்கு ஆங்கிலியா (Anglia)வில் சில இடங்கள். | ...... | சேதம் சொற்பம். காயம்பட்டவர்களும் கொஞ்சம். |
| | லிபியா (Libya). | | |
| | பென்காஸி (Benghazi) | 2 விமானங்கள் | பொது ஜனங்களுக்குக் காயம். |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம் | ...... | சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமுமில்லை. |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19—2—41** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—தென்வேல்ஸி (Wales)ல் ஸ்வான்ஸீ (Swansea), லண்டன் (London) பிரதேசம், தெற்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள், கிழக்கு ஸ்காத்லாந்தி (Scotland)ல் ஒரு பட்டணம். ஹோம்கவுண்டீஸி (Home Counties)ல் ஒரு இடம். | ...... | தீப்பிடித்தது. சிலர் மாண்டனர். கட்டடங்கள் சேதமாயின. காயம் பட்டவர்கள் அதிகமில்லை. |
| | **லிபியா (Libya).** | | |
| | பென்காஸி (Benghazi) | 1 விமானம். | 1 விமானம். |
| **20—2—41** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | 1 விமானம். | |
| | இரவில்.—தென் வேல்ஸி (Wales)லிருக்கும் ஸ்வான்ஸீ (Swansea), தெற்கு, தென் கிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள். லண்டன் (London) பிரதேசத்தில் சில இடங்கள். | ...... | கட்டடங்களுக்குச் சேதம்; சிலருக்குக் காயம், சிலர் மாண்டனர். |
| **21—2—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), கிழக்கு இங்கிலாந்து (England) | ...... | சேதமேயில்லை. சிலருக்கே காயம். |
| | இரவில்.—தென் வேல்ஸி (Wales)ல் ஒரு பட்டணம்; லண்டன் (London) பிரதேசம், கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | வீடுகளும், கட்டடங்களும் நாசமாயின. பலருக்குக்காயம். சேதம் சொல்பம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | துறத்தியடிக்கப் பட்டன. |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—2—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.–கெண்ட் (Kent) கடற்கரை | | சொற்பச்சேதம். |
| | தென் கிழக்குக் கடற்கரையில் சில இடங்கள். | ...... | சிலருக்குக் காயம். |
| | இரவில்.—வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சேதமேயில்லை. |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | ப்ரீவிஸா (Prevesa). | ...... | 3 பொது ஜனங்களுக்குக் காயம். |
| **23—2—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு, தென்கிழக்குக் கடற்கரைகள். | ...... | குண்டுகள் விழவில்லை. |
| | இரவில்.—வடகிழக்குக் கடற்கரையில் ஒரு பட்டணம். | ...... | சேதமேயில்லை. |
| | அங்குமிங்குமாகப் பல இடங்கள்.–கிழக்குக் கடற்கரை, லண்டன் (London) பிரதேசம். | ...... | சிலருக்குத்தான் காயம். |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | கிரேக்க சைனியங்கள், போக்குவரத்து சாதனங்கள்.—அல்பேனியா (Albania). | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | ப்ளாரினு (Florina) எல்லைப்புற பிரதேசம்.—கிரேக்க மாஸிடோனியா (Macedonia). | ...... | ...... |
| | **லிபியா (Libya).** | | |
| | விமானச் சண்டை.—பென்காஸி (Benghazi)க்குத் தெற்கே | ...... | 2 விமானங்கள். |
| **24—2—41** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | பகலில்.—வடக்கு ஸ்காத்லாந்தி (Scotland)ல் ஒரு பட்டணம். | ...... | சேதமுமில்லை, ஒருவருக்கும் காயமும் இல்லை. |
| | இரவில்.–கிழக்கு ஆங்கிலியா (Anglia)வில் அங்குமிங்கும் சில இடங்கள். | ...... | சொற்பச் சேதந்தான். |

# பிரிடன் பேசுகிறது.

## நான் காணும் எதிர் கால உலக கனவு.

('ஸிவில் இலாகா குமாஸ்தாக்களின் சங்கம்' என்ற அழுக்குப்படியாத வெள்ளை உடை தரித்தவர்களின் சங்கம் ஒன்று பிரிடனில் உண்டு. அதன் நிர்வாக சபையில் W. J. பிரௌன் என்பவர் பிரசித்தி பெற்றவர். அவர் செய்த ரேடியோ பிரசங்கத்தில் எல்லோர் மனதையும் அலைக்கும் பிரச்னைகள் எழுப்பப்பட்டிருப்பதால் அதை இங்கு தருகிறோம்).

### (1) நிலை பெற்ற சமாதானம்.

சென்ற போரைக் காட்டிலும் இதில் பிரிடனில் ஒற்றுமை ஜாஸ்தி. இருந்த போதிலும் எப்போதாவது ஒரு தனிக் குரல் 'எனக்கு என்ன நஷ்டம்?' என்று முணுமுணுவது காதில் படுகிறது. முணுமுணுப்பவன் தற்போதைய நிலைமையைப் பற்றி ஆட்சேபிப்பதை அது குறிக்கிறது. இதற்கு எதிரிடையாக, என் அக்கறை எல்லாம் 'எனக்கு என்ன மிச்சம்?' என்பதில் தான். நாம் நிச்சயமாக ஜயிக்கப் போகும் இந்த யுத்தத்தின் வெற்றியிலிருந்து எனக்கும் பிரிடிஷாருக்கும் என்ன லாபம்? முதன் முதலில் நாம் கோருவது என்ன என்று தெளிவோம். என்னைப் பொருத்த மட்டில் எனக்கு என்ன வேண்டும் என்பது எனக்குத் தெரியும். எனக்கு எது பிடித்தமோ அதேதான் என் தேசத்தாரில் பெரும்பான்மையோருக்கு—ஆண் பெண் அடங்கலாக—பிடித்தம் என்று நம்புகிறேன். நான் விரும்பும் முதல் விஷயம் இது. சதா தலைமேல் தொங்கும் யுத்த பயத்திலிருந்து உலகு விடுதலை அடையப் பார்க்க விரும்புகிறேன். சென்ற யுத்தத்தின்பொழுது எனக்கு வயது 20; இப்பொழுது 46. 1914-ல் இருந்து 26 வருடங்கள் கடந்தன; இதில் 6 வருடங்கள் யுத்தம்; 20 வருடங்கள் யுத்த பயத்தில் கழிந்தன. சென்ற யுத்தத்தை முடித்த சமாதானத்தில், சமாதானம் நிலைக்கக்கூடிய அம்சங்கள் இல்லை. சமாதானம் பெரும் போக்காகவும் இல்லை, கொடூரமாகவும் இல்லை. பெரும் போக்காய் இருந்தால்—இது சந்தேகம் தான்—பிரிட்டிஷாருக்கும் ஜெர்மானியருக்கும் இடையே மனச் சமாதானம் ஏற்பட்டிருக்கலாம். கொடூரமாயிருந்திருந்தால் ஹிட்லரிஸம் தடைப்பட்டிருக்கும். அது இதுவுமன்றி அதுவுமன்றி இரண்டுங்கெட்டானாகிவிட்டது. 1920ம் வருடம் முதல் நாம் ஐரோப்பா க்ஷீணித்து வருவதையும், தேசங்களுக்கு இடையே பரஸ்பர நம்பிக்கை பந்தோபஸ்து குறைவதையும், உலகினில் நாளுக்குநாள் அதர்மம் வளர்ந்துவருவதையும் மௌனமாகப் பார்த்து வரவேண்டிவந்தது. இந்த 20 வருஷங்களும் ஐரோப்பாவின் வாழ்க்கை ஒரு இசிவிலிருந்து மற்றொரு இசிவுக்குச் செல்வதுதான். ஒவ்வொரு இசிவும் ஐரோப்பாவை முன்னைக் காட்டிலும் நிலைகுலைத்து, அஸ்வாஸ்த்யமாக, என்னநேருமோ என்ற பீதியில் விட்டது. சண்டை வேண்டாம் என்று நாம் விட்டுக்கொடுத்ததுகள், சமாதானத்துக்கு நாம் செய்த முயற்சிகள், இவைகள் யுத்தத்தை விலக்க முடி

யாமல் இறுதியில் அந்தப்பிரளயமே வந்த பொழுது, இவ்வளவு வருஷங்களின் அநிச்சயம், கவலை, மனோபாரம் இவைகளுக்குப்பின் அது ஒரு விதத்தில் தெளிவாகக்கூட இருந்தது. இதையே தான் சர்ச்சில், 'உலகில் யுத்தம், நமது மனதில் தெளிவு,' என்றார். இம்மாதிரி மற்றொரு இருபது வருஷங்கள் இடையே ஒரு பொழுதும் காலங்கழிக்க விரும்பேன். இம்மாதிரி உலகில் என் குழந்தை குட்டிகளை வாழ விரும்பேன். அவர்களுடைய குழந்தைகளும், கிரியைகள் ஒடுங்கி, வாழ்க்கை வரம்புகள் குறுகி எப்பொழுது யுத்த இடி விழுமென்று பயந்து, இருண்ட வானத்தின் கீழ், இம்மாதிரி உலகில், வாழ விரும்பேன். ஆதலால் தான், எனக்கும் என் மக்களுக்கும் அவர்கள் மக்களுக்கும் ஒருவராலும் குலைக்கப் பெறுமல் நீடூழிநிற்கும் சமாதானம் முதன் முதலாகவேண்டும், என்று வற்புறுத்தினேன். இது கிடைக்க கூடியதா? ஒன்று மட்டில் நிச்சயம்—ஜெர்மனி ஜயித்தால் உலகில் ஒரு இடத்திலாவது சமாதானம் இருக்கும் என்று நம்பமுடியாது. அப்படி சமாதானம் இருக்குமாயின் அது மாண்டாரின் சமாதானம் தான்—ஸ்மசானத்தில் நிலவும் சமாதானம். ஏனெனில் நாஸிக்கொள்கையின் அடிப்படை, ஓயாத யுத்தம். ஒவ்வொரு வெற்றியும் அடுத்த வெற்றிக்கு பாய்ச்சல் இடம். ஆக்கிரமிக்கப்பட்ட ஒவ்வொரு நாடும் அடுத்த நாட்டுக்கொள்ளைக்கு கிளம்பும் இடம். அடிமைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு நாட்டாரும் மற்றநாட்டாரை அடிமைப்படுத்த வித்தாவார். ஹிட்லருக்கும் ஹிட்லரிஸத்துக்கும் எல்லை—வான் தான். இத்தீவு ஜெர்மன் நுகத்தடியின் கீழ்சென்றால், ஜெர்மன் துருப்புகளை மறுபடி சேர்ப்படுத்த கொஞ்சம் அவகாசம்—பிறகு, யார் கண்டார்கள்? — அமெரிக்காவையும் ருஷ்யாவையும் குறித்து படைகள் கிளம்பலாம். புதுப்படையெழுச்சிக்கு துவஜாரோஹணம் மட்டும் தப்பாது; நாஸிஸத்தின் தத்துவமே யுத்தம். ஓயாத, அளவில்லாத, மூச்சுவிடாத, முடிவில்லாத, யுத்தம். ஜெர்மன் படையெழுச்சிகளில் இது ஒரு அடிப்படையான விஷயம். ஆயினும் நாம் ஜெர்மனியை ஜயித்தால் போன யுத்ததில் நடை பெற்றதே நடைபெறாது என்பதற்கு என்ன உறுதி? ஒன்றுண்டு. கீழ்நாட்டு பழமொழி ஒன்று வழங்குகிறது: 'உன் எதிராளியிடம் நீ ஒரு தரம் ஏமாந்தால் அவனை வை; இரண்டுதரம் ஏமாந்தால் உன்னையும் வை அவனையும் வை; மூன்றும் தரம் ஏமாந்தால் உன்னையே வை." நம் வாழ்நாளில் இரண்டு தரம் ஜெர்மனி வலுவில் நாகரீக உலகத்தை போருக்கு இழுத்திருக்கிறது. இரண்டு தடவை லட்சக்கணக்கான மக்களை அபாயம், வேதனை, மரணம் இவற்றுக்கு உள்ளாக்கி இருக்கிறது. உலகின் ஒழுங்குப்போக்கை இரண்டு தடவை தடுத்திருக்கிறது. (சர்வதேச சங்கம் கூட்டுறவால் சமாதானத்தை பாதுகாக்க ஏற்பட்டது. ஐக்கிய அமெரிக்கா ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடாமல் விலகி நின்றது பல விதங்களில் நியாயம்தான். ஆயினும் அதுதான் சர்வதேச சங்கத்தை நிலைகுலையச்செய்த முதல் அடி). ஆயினும் என் எலும்பு முதல் கதறுகிறது—உலகின் நாகரீகமே, இந்தத் தடவை ஐக்கிய அமெரிக்காவின் நீங்காத

ஒத்துழைப்பைப்பெற்று, இந்த யுத்தத்தில் வெற்றி ஏற்பட்டபின், இடைவிடாத சமாதானத்தை வேரூன்றும்படி செய்ய, தக்க ஏற்பாடுகள் செய்யாமல் இராது, முடியவும் முடியாது.

### (2) இரண்டாவது கனவு—போதுமான பொருளாதாரம்.

இரண்டாவது விஷயம் நானும் எல்லா மக்களும் கோருவது என்ன? 'போதுமான பொருள் ஆதாரம்'—என்ற வார்த்தைகளில் அது அடங்கி நிற்கிறது. நான் ஜாஸ்தி பணத்துக்கு ஆசைப்பட்டவன் அல்ல. வாழ்க்கையின் அடிப்படையான தேவைகள்—உணவு, வீடு, உடை, விறகு—இவைகள் அளிக்கப்பட்டு, சற்று உபரி வசதிகளான புகையிலை, புஸ்தகங்கள் வகையறுவுக்கும் இடம் ஏற்படுமானல், அதன்பின் பணத்தின் மதிப்பு சரேலென்று குறைந்து விடுகிறது. ஒரேகாலத்தில் ஒரு மனிதன் ஒரு வீட்டிற்கு மேல் வசிக்க முடியாது, ஒரு சாப்பாட்டுக்கு மேல் சாப்பிட முடியாது, ஒரு உடைக்கு மேல் தரிக்க முடியாது. ஆயினும் ஒரு மனிதன் சமூகத்துக்காக தன்னால் இயன்ற வரை உழைத்து பாடுபடத் தயாராயிருக்கும் பொழுது, இவ்வளவு உழைப்புக்கு பதிலாக நியாயப்படி அவனுக்கு வாழ்க்கையின் அடிப்படையான தேழ்வைகளும் சற்று உபரி வசதிகளும் கிட்டுவது நிச்சயமில்லை என்றால், சமூகரீதியாக அது ஒரு அக்கிரமம், நீதி சாஸ்திரப்படிக்கும் அது ஒரு அதர்மம். இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றால், நமது எதிர்கால சமூக வாழ்க்கையில் இப்போதுமான பொருள் ஆதார திட்டத்துக்கும் இடமுண்டு, 1920 முதல் 1940 வருடங்களில் போல கர்ஷணை யில்லாமல் இனி இராது, என்று நாம் எதிர்பார்க்கலாமா? எதிர்பார்க்கலாம் என்றே நினைக்கிறேன். இதைக்கேட்டு உங்களில் சிலர் கசப்புடன் சொல்லலாம்: 'இந்தக் கதை எல்லாம் சென்ற யுத்தத்திலும் கதைக்கப்பட்டது. அது ஒன்றும் நிறைவேறவில்லை. நாங்கள் மறுபடியும் ஏமாறப் போவதில்லை' இந்தக் கசப்பு புரிந்து கொள்ளக்கூடிய விஷயம் தான். நான் கூறுவதெல்லாம் ராஜதந்திரிகள் செய்யும் சத்தியங்களை மட்டில் பொருத்ததாயிருக்குமாயின், உங்கள் முன் எதையும் சொல்லக்கூசுவேன். நான் ஒரு கட்சியையும் சேர்ந்தவன் அல்ல. நான் சேர்ந்தது என் கட்சிதான். சமாதான காலத்தில் நான் வேடிக்கையாக 'நுணி முதல் அடிவரை பிளவாதகட்சி அது ஒன்று தான்' என்று சொல்லுவதுண்டு. என் உறுதி ராஜதந்திரிகளைப் பொருத்ததல்ல. யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கும் பெரும் மாறுதல்களைப் பொறுத்து நிற்கிறது. அது மூன்று விஷயங்களைப் பொருத்தது. அவற்றை கவனியுங்கள்.

### (a) இந்த யுத்தம் எல்லா ஜனங்களின் யுத்தம்.

முதல் விஷயம் இது. சென்ற யுத்தம் தரைப்படைகளின் யுத்தம், கடற்படைகளின் யுத்தம். இடையே இடையே ஒரு விமான தாக்குதல் நீங்கலாக, யுத்தம் முழுவதும் பிரிட்டனுக்கு வெளியில். பிரிட்டனின் சமூக வாழ்க்கையை பாதிக்கவே இல்லை. இந்த யுத்தமோ சர்வாதிகார நாடுகள் நமது சகல ஜனங்களின் மீதும் செய்யும் யுத்தம். இதில் சிப்பாய், ஸிவிலியன், ஆண், பெண், குழந்தை என்ற வித்தியாசம் இல்லை. சென்ற

யுத்தத்தின் நாலு வருஷங்களில் காட்டி லும் இந்த யுத்தத்தின் 16 மாதங்களுள் பிரிடனின் வாழ்க்கையில் மாறுதல்கள் ஏராளம். இது தான் முதல் விஷயம்.

### (b) நாஸி மாத்சர்யங்களும் புளுகுகளும்.

இரண்டாவது விஷயம் இது. நாம் சண்டை போடும் நாஸிஸத்தின் அடிப்படை மாத்சர்யங்களும் புளுகுகளும். நாஸிமாத்சர்யம் பரந்து கிடக்கிறது—ஜூக்களைப்பற்றி; பொதுவுடமைக்காரர்களைப்பற்றி; லிபரல்கள், படித்தவர்கள், கலைகள், ஆரியர் அல்லாதார்—சுருங்கச் சொல்லின் நாஸிமயம் இல்லாத உலகம் பூராவையும்பற்றி. நாஸிகளின் புளுகுகளோ—அவர்கள் ஜெர்மன் அக்கரைகளுக்கு நன்மை ஏற்படுமாகில் புளுகு மன்னிக்கக்கூடிய தவறு என்பதுடன் அல்லாமல், அது ஒரு பெரும் தேச கைங்கர்யம் என்று ஜெர்மானியர்கள் பகிரங்கமாக பிரகடனப்படுத்தும் காலம் இது. மாத்சர்யங்கள், புளுகுகள்—இவற்றுடன் அல்லவோ நாம் போராடுகிறோம்.

### வேண்டுவது—உண்மையும் அனுதாபமும்.

கடைசியில், அபாவ விஷயங்களான மாத்சர்யத்தையும் புளுகையும் வெல்லக்கூடியது அவற்றுக்கு எதிரிடையான பாவ பதார்த்தங்களான உண்மையாலும் காதலாலும்தான். 'காதல்' என்பதில் ஒரு விசேஷ அர்த்தமுண்டு. ஆனதால் அந்தவார்த்தையை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக 'அருள்' என்ற வார்த்தையை பிரயோகிப்போம். இந்தப்பதத்தின் சரியான அர்த்தம் 'உடன் இறங்கல்,' 'அனுதாபம்'. இந்த யுத்தத்தை நாம் ஜயிக்க வேண்டுமானால், இவ்விரண்டு பாவ பதார்த்தங்களாகிய உண்மை, அனுதாபம், இவைகள் ஜாஸ்தி நடமுதலுக்கு வர வேண்டும். நாம் செல்ல வேண்டும் மார்க்கம் இதுதான். சற்று யோசித்துப் பாருங்கள், நாம் ஏற்கனவே இப்பாதையில் சற்று தூரம் சென்றிருக்கிறோம் அல்லவா? விவசாயிகளின் பொருள் ஆதார நிலைமை உயர்வில்; கப்பற்பட்டறைகளில் தொழில் முறைகளை நியதியாகச் செய்ததில்; யுத்தத்தில் மாண்டோரின் சுற்றத்தார்களுக்குக் கொடுக்கப்படும் ஜீவனும்ச உயர்வில்; குண்டுகளால் தகர்க்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வந்த பெண்கள், குழந்தைகளுக்கு நூற்றுக் கணக்கான வீடுகள் திறந்து விடப்பட்டதில்; ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பெருகும் சாமான்கள், பண உதவியில்; இது போன்ற அநேக விஷயங்களிலும், நான் சொன்ன பாதையில் நாம் செல்வது நிரூபிக்கப்படுகிறது. யுத்தம் நடக்க நடக்க, வளர்ந்து கொண்டுவரும் அதன் நெருக்கடிகளுக்குக் கீழ்ப்படிந்து, பொது அபாயம் பொதுப் பொறுமை சந்நிவேசங்களுக்கிடையே, மேலும் மேலும் நாம் இந்தப்பாதையின் முடிவு வரை செல்லத்தான் வேண்டும். இதற்குப் பிறகு, யுத்தத்துக்கு முந்திய நாட்களில்போல, நாம் திட்டமில்லாத 'இஷ்டப்படி நடக்கும்' நாட்களுக்கு, மீண்டும் திரும்புவோம், என்று நான் நினைக்கவில்லை.

### (c) வேண்டுவது—பொது பிரச்னைகளைப் பொதுவாக தீர்த்தல்.

மூன்றுவது விஷயம் இது. சென்ற யுத்தத்தில் ஒருவித ஒற்றுமை இருந்

தது; ஆனால் அது இந்த யுத்தத்தில் இருக்கும் அளவு இல்லை. சென்ற யுத்தம் முடிந்ததும் நாம் கட்சிகளின் அரசாட்சிக்குத் திரும்பினதால், ஒற்றுமை சிதைந்தது. 1918-ம் வருஷத்திற்குப் பிறகு, சமாதானத்திலிருந்து இந்த யுத்தம் வரை இடைக்காலத்தில், பொதுப் பிரச்னைகளை நாம் தீர்க்கச் செய்த முயற்சிகள் பொதுவாக இல்லை. அது கட்சிப் பிளவுகளின் ரீதியாகவே இருந்தது. இந்த யுத்தத்தின் முடிவில், யுத்தத்திலிருந்து சமாதானத்துக்குச் செல்லும் இடைக்காலப் பிரச்னைகள், சென்ற யுத்தத்தின் முடிவிலிருந்தவற்றைக்காட்டிலும் பிரம்மாண்டமானதாய் இருக்கும். அவைகளை கட்சிப்பிளவுகள் ரீதியாக தீர்க்க முயற்சிப்பது ஆபத்துக் கிடமாகும். இவைகளை ஒழுங்காக தீர்க்கவேண்டுமானல், ஏகாக்ர பொது ஜன முயற்சி வேண்டும். காமன்ஸ் சபையில் சர்ச்சில் சென்ற வாரம் செய்த பிரசங்கத்தில், தனித்துப் பேசுகையில், தானும் தன் கவர்ன்மெண்டும் இதை உணர்ந்ததாக வெளிக் காட்டினர். யுத்தத்துக்குப் பிறகும், குறிப்பிட்ட காலம் வரை, பொதுக் கட்சி கவர்ன்மெண்டு நீடித்திருப்பதையும் மாறுதல் இடைக்காலப்பிரச்னைகளைத் தீர்ப்பதில் பொது முயற்சியையும், அவர் குறிப்பிட்டார். இம்மூன்று காரணங்களால், ராஜதந்திரிகளின் சத்தியங்களில் காட்டிலும், இந்த யுத்தம் முடிந்தவுடன் நாம் பழைய முறைகளுக்குத் திரும்பமாட்டோம், யுத்தம் முடிந்து உலகை நாம் திரும்ப நிர்மாணம் செய்யும் பொழுது பொருளாதார நிலைத்தலும் இருக்கும், என்று நான் எதிர் பார்க்கிறேன்.

## (3) மூன்றும் கனவு—சகோதரத்வமும் சமூக நியாயமும்.

நான் கோரும் மூன்றுவது விஷயம் என்ன? உலகில் சமாதானமும் போதுமான பொருளாதாரமும் நிலவிய பின்பும் நமக்கு திருப்தி ஏற்படாது. இவைகளில் வாழ்க்கையின் பூர்ணத்வம் முழுவதும் இல்லை. அவைகள் வாழ்க்கையின் அஸ்திவாரம். உடலின் தேவைகள் திருப்தி செய்யப்பட்டபின், மனதில் உணர்ச்சி, கலைகள் புதிய உலகம் ஒன்று தோன்றுகிறது. அவைகள் திருப்தி செய்யப்பட்டால் ஒழிய வாழ்க்கை வாழ்க்கை ஆகாது, வெறும் ஜீவனமாகும். இதற்கு ஒரு உதாரணம் சகோதரத்வக் கொள்கை. இதனைக் குறித்து வில்லியம் மாரீஸ் என்ற கவி 'சகோதரத்வம் சுவர்க்கம், அது இல்லையேல் நரகம்' என்று கூறியிருக்கிறர். மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கவேண்டிய இந்த உணர்ச்சியை பொருளாதாரம் என்ன, படிப்பு என்ன, இந்த வித்தியாசங்கள் அறவே துடைத்துவிட்டது. உத்தியோக முறைகளில் அல்லாமல், பாங்கிலிருக்கும் பண வித்தியாசத்தைப் பொருத்தது அல்லாமல், பள்ளிக்கூடத்தைப் பொருத்து அல்லாமல், எல்லாமனிதரிடையே இருக்கும் மன ஆத்ம ஒற்றுமைகளை முன்னிட்டு ஒரு மனிதன் மற்றொரு மனிதனை வரவேற்க விரும்புகிறேன். இதையும் நான் பார்ப்பேனு? ஆம், பார்க்கலாம். ஏனெனில், யுத்தத்தால் நேரும் பொது ஆபத்து பொதுதியாகம், பொதுவாக ஆயுதம் தாங்கல், நாட்டுக் காவலில் ஏற்படும் சிநேகிதம், தீக்களை அணைப்பதில் சகோதரத்வம், நூற்றுக் கணக்கான

விதங்களில், யுத்தமானது செயற்கைக் கட்டுப்பாடுகளையும் வித்தியாசங்களையும் அழித்து வருகிறது. ஒவ்வொருவரிடமும் இருக்கும் ஆஸ்திக்காக இன்றி, மனிதர் என்ற ஹோதாவில் ஒருவரை ஒருவர் மதிக்க ஆரம்பித்து விட்டோம்.

---

## அச்சு தேசத்தார் பக்கம் ஜப்பான் நிற்குமா?
## மிஸ்டர். மட்ஸூகோவின் செய்தியின் முக்கியதை.
## சீக்கிரம் முடிவு ஏற்படக்கூடியது.

(விக்ஹாம் ஸ்டீட்.)

சமீபத்தில் நடந்த சம்பவங்களில், பிப்ரவரி 2-ம் தேதியன்று ஜப்பானின் அந்நிய தேச காரியதரிசியான Mr. மட்ஸூகோ டோகியோ சட்ட சபையில் சொன்ன சங்கதியானது போர்முனையின் சண்டை ஒன்று எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானதாக எண்ணப்படக்கூடியது. ஐரோப்பாவில் நமக்கு மட்ஸூகோவைப்பற்றிக் கொஞ்சம் தெரியும். மஞ்சூரியாவை ஜப்பான் தாக்கிவந்த விஷயத்தைப்பற்றி சர்வதேச சங்கத்தில் 1932-ல் சர்ச்சை செய்யப்பட்ட சமயம் அவர் ஜப்பானிய பிரதிநிதியாக வந்தார். அவர் பேச்சில் விஷயம் ஒன்றுமில்லாதபோனாலும் அவர் நடவடிக்கையில் விஷயம் வெகுவாக இருந்தது. மஞ்சூரியாவிலும், சீனாவிலும், கீழ் ஆசியாவில் எந்த பாகத்திலும் தன்னிஷ்டம்போல் செய்யத் தீர்மானித்திருப்பதாக அவர் நடவடிக்கையிலிருந்து வெளியாயிற்று. அவர் நடவடிக்கையை கவனித்தவர்கள் இப்பால் அவர்கள் சொல்லிவருவதுபோல் 1931-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 18-ம் தேதியிலேயே மஞ்சூரியாவில் உலகயுத்தமே துவக்கியதென்று சொல்லாமற்போனாலும், ஒரு விஷயம் அவர்களுக்கு நன்றாகப் புலப்பட்டது; அதாவது, 1915-ல் 21-விஷயங்கள் கேட்டு சீனாவிற்கு ஜப்பானியர் விடுவித்த நமூனாவில் கண்ட விதமாகவே சீனாவை முற்றிலும் தங்கள் ஆதிக்கத்துக்குட்படுத்தவேண்டுமென்ற கொள்கையைக் கைப்பிடித்திருந்த ஜப்பான் தேசத்திய பிரதிநிதியென்று ஸ்பஷ்டமாகப் புலப்பட்டது.

அதுமுதற்கொண்டு மட்ஸூகோவின் நடவடிக்கை ஒரேமாதிரியாய் இருந்திருக்கிறது. ஜப்பான் பட்டாளத் தலைமை வர்க்கத்தாரென்ன, கரும் ஸர்ப்ப சங்கம் என்ன, இன்னும் ராணுவ சங்கங்களென்ன, இவைகளின் கொள்கையை இவர் ஆதரித்து வந்திருக்கிறார். ஆகையால், 2-ம் தேதியன்று அவர் குறிப்பிட்ட கொள்கையின் மூன்று அம்சங்களும் உள்ளது உள்ளபடி சொல்லப்பட்டிருக்கின்றன. அவை யாவன: கீழ் ஆசியாவில் சீனாவைத் தங்களது முதல் பாதுகாப்பு அணியென்று அமெரிக்கர்கள் எண்ணம் மாறும்வரை, ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் ஸ்நேகமென்பது சொப்பனம்தான்.

(2) மேல் பசிபிக் சமுத்திரத்தில் ஜப்பான் ஆதிக்கம் இருக்கவேணும், அதை அமெரிக்கா ஒத்துக்கொள்ள வேணும்.

(3) இதை அமெரிக்கா மனதிற்கு வாங்கிக்கொள்ளாவிட்டால், ஜப்பான் திடசித்தத்துடன் தன் கொள்கையைப் பின்பற்றும்.

இச்சமயத்தில் ஏன் ஜப்பான் அமெரிக்காவை பயமுறுத்த வேணும். இதற்கு பதில் நாம் அனுமானிக்கவேண்டியது. அமெரிக்காவானது ஐரோப்பிய யுத்தத்தில் கலந்துகொண்டால், ஜெர்மனியுடனும், இதாலியுடனும் ஜப்பான் செய்துகொண்டிருக்கிற உடன்படிக்கைப்படி தன் கடமைகளை ஜப்பான் செய்யும்படி நேரிடுமென்று மட்ஸுகோ பேச்சில் சொல்லியிருப்பதிலிருந்து காரணம் நாம் அனுமானிக்கக்கூடியதாயிருக்கிறது. தங்கள் தலைவிதி அந்தச் சண்டையைப்பொருத்ததென்றும், அப்படிக்கிருந்தும் தங்கள் கடமையைச் செய்வதில் ஜப்பானியர் பின்வாங்கமாட்டார்கள் என்றும் சொன்னார்.

ஐரோப்பாவில் அச்சு தேசத்தார் நிலைகெட்டிருக்கும் சமயத்தில் அமெரிக்காவைப் பயமுறுத்த வேண்டி ஜெர்மனியின் யோசனையின் பேரில் செய்யப்பட்ட அரசியல் தந்திரமே ஒழிய இது வேறொன்றுமில்லை, என்று நினைக்கமுடியாது. அச்சு தேசத்தார் ஐரோப்பாவில் தோல்வி அடைந்தால், ஜப்பான் சீனாவில் அடைந்திருக்கும் நாடுகளையும், கீழ் ஆசியாவையும், பஸிபிக் மஹாசமுத்திரத்தையும் ஆளுவது என்ற ஜப்பானுடைய எண்ணம் நிறைவேறாது என்று ஜப்பானுக்கு நன்றாகத் தெரியும். அப்படியானால் 1931 ஸெப்டம்பரில் ஆரம்பித்த நடவடிக்கை ஜப்பானை நிவர்த்திக்க முடியாத ஆபத்தில் மாட்டிவிடும்; அதனால் அச்சு தேசத்தாரின் வம்புச் சண்டைகளின் வெற்றியை எதிர்பார்த்து ஆனது ஆகட்டுமென்று ஜப்பான் நினைத்திருப்பதாக நான் உண்மையில் நினைக்கிறேன்.

1932-ல் ஜெனிவாவில் மட்ஸுகோ, நடந்துகொண்ட தினுசிலிருந்து முன்னால் ஜப்பானிடம் சிநேகம் பாராட்டி இருந்த தேசத்தார் அவர் நடவடிக்கையைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று மதிக்கச் சக்தியற்றவர் என்று நிரூபித்துவிட்டார். அதேமாதிரி, இப்போதும் இவர் பயமுறுத்தலைப் பற்றி அமெரிக்கர் என்ன நினைப்பார்கள் என்று அறிய சக்தியற்றவராகக் காணப்படுகிறார். தங்கள் எதிர்கால சம்பந்தமாக முடிவுகள் செய்யவேண்டிய அவசியமிருப்பதாக, ஜப்பானியர் நினைப்பதால்தான், முஸோலினி தோல்விமேல் தோல்வியடைந்து இதாலிய காரியங்களை ஹிட்லர் நடத்த வந்திருக்கும் இச்சமயத்தில் இந்த பயமுறுத்தல் பேச்சைபேசியிருக்கிறார். ஆகையால்தான் மட்ஸுகோவின் பேச்சு முக்கியமென நான் கருதுகிறேன்.

## ஜெர்மன் விமானப்படையின் பலமென்ன?
## ஜெர்மன் விமானப்படையின் பாகுபாடென்ன?
## எவ்வளவு விமானங்கள் பிரிடனைப் படையெடுக்கும்?

ஸண்டே டைம்ஸ் விமான நிருபர் எழுதுவது:—

ஜெர்மனிக்கு 70,000 விமானங்களிருப்பதாயும், அவைகளில் சண்டை வகுப்பைச் சேர்ந்தவை 36,000 மென்றும் சமீபத்தில் அமெரிக்காவில் போட்ட கணக்கு வெறும் பிதற்றல். ஜெர்மனிக்கு 40,000 விமானங்களுக்குமேல் கிடையாது. இவைகளில் சண்டைக்கு லாயக்கானவை 18,000 தான். தயாராயிருக்கும் விமானங்களில் ஒரு பாதிதான் எப்பொழுதும் வெளிவருமாதலால் 9,000 விமானங்கள்தான் ஒரேகாலத்தில் சேர்ந்து படையெடுக்கமுடியும்.

ஜெர்மன் விமானப்படையின் பாகுபாடும், அவைகள் நிற்கும் இடங்களும்.

படை 1. ஜெர்மனி (கீழ்பாகம்).

படை 2. பெல்ஜியம், பிரான்ஸ் (வடபாகம்), ஹாலண்ட் (சேனாதிபதி கெஸெல்ரிங்).

படை 3. பிரான்ஸ் (மேற்குபாகம்) சேனாதிபதி ஸ்பெர்ள்.

படை 4. வியன்னா.

படை 5. ஹாலண்ட் (வடபாகம்), ஜெர்மனி, டென்மார்க், நார்வே (சேனாதிபதி—ஸ்டம்ப்.)

படை 6. ருமேனியா.

படை 7. இதாலி.

படை 8. கப்பற்படைக்கு—அங்கம்.

படை 9. விமானிகளைப்—பழக்க.

இவைகளில் ஒன்று முதல் ஏழுவரை பக்காப்படை: 2, 3, 5 பிரிடனைத் தாக்கக்கூடியவை.

### அமைப்பு.

1. 12 **விமானங்கள்** கொண்டது ஒரு **வகுப்பு** (ஸ்க்வாட்ரன்). விமானங்கள் மூன்று வகைப்படும்,—சண்டை விமானம் (பைடர்), வெடி விமானம் (பாம்பர்), வேவு விமானம் (ரெகெனேஸான்ஸ்). ஒரே சமயத்தில் 12 விமானங்களும் படையெடுக்காது. மூன்று 'ரிஸர்வ்' அதாவது கையிருப்பில் வைக்கப்பட்டு, 9 தான் வெளிச்செல்லும்.

2. மூன்று **வகுப்புகள்** கொண்டது ஒரு **பகுதி** (க்ரூப்).

3. மூன்று **பகுதிகள்** கொண்டது ஒரு **தொகுதி** (கெஷ்வாடர்).

4. இரண்டு பைடர் **தொகுதிகளும்**, ஒரு வேவு **தொகுதியும்** கொண்டது ஒரு **அணி** (கோர்).

5. மூன்று வெடித் **தொகுதிகளும்**, ஒரு பைடர் **தொகுதியும்**, ஒரு வேவுப் **பகுதியும்** கொண்டது ஒரு **வியூகம்** (டிவிஷன்). ரிஸர்வ் விமானங்களையும், பிரயாணிகள் தளவாடங்கள் ஏற்றிச்செல்லும் பார-விமானங்களையும் சேர்க்காது வியூகம் ஒன்றுக்கு 480 விமானங்களிருக்கும்.

6. மூன்று **வியூகங்களும்**, ஒரு பைடர் **அணியும்** கொண்டது ஒரு படை (ப்ளீட்). ஒரு படையில், சுமார் வெடிவிமானம் 1,000, வேவு 75, பைடர் 625. கூடுதல் 1,700—எப்பொழுதும் 4-ல் 1 பங்கு பழுதுபார்க்கப்பட்டு வருமாதலால் தயாராயிருப்பது 1,300.

8-ம் படையாகிய கப்பற்படை-அங்கம் 1,000 விமானங்கள்; 9-ம் படையாகிய பழக்கும் விமானங்கள் 500; பார-விமானங்கள் 2,000; விமான நிலய சிப்பந்திகளையேற்றிச்செல்ல ஒவ்வொரு இதர 140 விமானங்களுக்கு 30 பார-விமானங்கள்.

## மதிப்பு.

[உத்தியோக முறையில் கிடைத்ததல்ல.]

| ரகம். | | மொத்தம். (ரிஸர்வ், பார-விமானங்கள் உள்பட) | படையெடுக்க. (ஒன்றுக்குப்பாதி) |
|---|---|---|---|
| 1. படைகள் 1 முதல் 6 வரை | ... | 16,500 | 7,800 |
| 2. தனிப்படை | ... | 2,750 | 1,300 |
| 3. கப்பற்படை-அங்கம் | ... | 1,000 | 500 |
| 4. பழக்கும் படை | ... | 650 | 400 |
| 5. பாரப்படை | ... | 3,500 | 2,000 |
| மொத்தம் | ... | 24,400 | 12,000 |

இவைகளில்பாதி, ரிஸர்விலும், கட்டிமுடியாமலுமிருக்கும்; 5,000 பழக்கவும், பாரமேற்றிச் செல்லவும் வேண்டியிருக்கும். பாக்கி, 40,000.

இதோடு, புதிதாய்க்கட்டும் விமானங்களைச்சேர்த்து, சண்டையில் உடைந்தும், பழுதாயும் போகும் விமானங்களைக் கழிக்கவேண்டும்.

## ஜெர்மன் விமான நஷ்டம்.

பிரிடனுக்கிதுவரையில் ஏற்பட்டிருக்கும் 6,000 வெற்றிகளிலிருந்து கணக்கிட்டதில், சராசரி, ஜெர்மனி தோல்வியடையும் ஒவ்வொரு சமயமும் அழிவது ஒன்று, உபயோகப்படாது சேதமாவது இரண்டு, கூடுதல் 3 விமானங்கள் நஷ்டமென்று தெரிகிறது. ஜெர்மனியோ பிரிடனோடு மட்டுமல்லாது போலண்ட், நார்வே, டென்மார்க், பெல்ஜியம், பிரான்ஸ் தேசங்களிலும் விமானப்போர் செய்திருக்கிறது. **மொத்த நஷ்டம் 24,000 விமானங்கள்.** (பிரிடனுக்கு நஷ்டம் உடைந்தது 1,800; பழுதுபட்டதுள்பட மொத்தம் 5,500. இதற்குமேல் புது விமானங்கள் கட்டியாய் விட்டது).

### புதுவிமானங்கள்.

பலவிதமான விமானங்கள் மாதத்துக்கு 2,300 வீதம் ஜெர்மனியில் கட்டப் படுகின்றன. இவைகளில் சண்டைக்கு லாயக்கானவை மாதத்துக்கு 1,400; மொத்தம் (யுத்தமாரம்பித்ததிலிருந்து) **24,000**.

ஜெர்மனிக்கு அழிந்த விமானங்களும் 24,000, புதிதாய் கட்டப்பட்ட விமானங்களும் 24,000, ஆதலால், முதலில் இருந்த விமானங்கள்தான் இப்பொழுதுமிருக்கின்றன. இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது. இதனுல் தான் சென்ற மாதங்களில் விமானப்போர் தடைப்பட்டிருக்கவேண்டும்.

அமெரிக்கர்கள் மதிக்கிறபடி ஜெர்மனிக்கு 31 வியூகங்கள் கிடையாது. பாகுபாட்டுக்கணக்கில் பிசகிவிட்டார்கள். தனித்த படையையும், ரிஸர்வையும் சேர்த்தாலும்கூட ஜெர்மனிக்கு 21 வியூகங்களும், 10 அணிகளும்தானுண்டு. ரிஸர்வைக் கூட்டி, பார-விமானங்களையும் சேர்த்தால் 15,800 அல்லது 18,000 விமானங்களுக்குமேல் கிடையாது. இவைகளில் மூன்றில் ஒரு பங்குதான் பிரிடனுக்கருகாமையில் நிற்கின்றன. எப்பொழுதும் ஒன்றுக்குப் பாதிதான் படையெடுக்கும். ஆகவே 3,900 விமானங்கள்தான் பிரிடனை எதிர்க்கக்கூடியது.

இதுவரையில் 2,500 விமானங்களுக்குமேல் ஜெர்மனி ஒரே சமயத்தில் படையெடுக்க அனுப்பியது கிடையாது. பிரான்ஸிலிருக்கும் நிலையங்கள் பழைய மாதிரியானதால், சொற்ப விமானங்களுக்குமேல் இங்கு நிற்கவும் முடியாது. பெரிய படைகளைக்கொண்டுவர இது ஒரு தடை.

போலண்ட், இதாலி, பால்கன் நாடுகளில் வைத்திருக்கும் விமானங்களை எடுக்கமுடியாது: எடுத்தால் அங்கே கலகம் வந்துவிடும். இந்த விமானங்களை வைக்க பிரான்ஸிலும் இடம் கிடையாது. ஆகையால் பிரிடனை எதிர்க்க 9,000 விமானங்கள் தானிருக்கும்: இவைகளில் 4,500 வெடி விமானங்கள்; ஒரே காலத்தில் படையெடுக்கக்கூடியது 6,000.

---

# மார்ஷல் பிடேனுக்கு ஹிட்லர் வாய்மொழியாய் அனுப்பிய எச்சரிக்கை.

---

### பிடேன் விடுத்த கடுமையான பதில்.

*டெயிலி டெலக்ராபின் லிஸ்பனிலிருக்கும் நிருபர் பிப்ரவரி 3-ம் தேதியன்று தந்தி மூலம் அறிவிக்கிறார்.*

இன்றிரவு எனக்கு ராஜதந்திர அதிகார வர்க்கத்தாரிடமிருந்து தடஸ்தமாகக் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து, மார்ஷல் பிடேன் ஹிட்லரைக்காட்டிலும் அதிகமான தன்னுடைய வெருட்டலினுல் ஜெர்மானியர்கள் விஷி ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதை ஒதுக்கி வைத்துவிட்டானென்று வெளியாகுகிறது.

அவைகள் என்னவென்றால், பிரெஞ்சு கடற்படையும், குடியரசு நாடுகளும். ஆக்கிரமிப்பு இல்லாத நாடுகளுக்குள் ஹிட்லர் புகுந்து அவைகளை எடுத்துக் கொண்டால் பிரெஞ்சு கடற்படையும், பிரெஞ்சு சாம்ராஜ்ஜிய நாடுகளும் பிரிடனுக்கு ஒத்தாசை செய்ய பிரிடனுடன் சேர்ந்து மறுபடியும் யுத்தத்தைத் துவக்குமென்று நிச்சந்தேகமாக ஹிட்லருக்கு பிடேன் சொல்லிவிட்டான். மேலேசொன்ன பதில் பிடேனுக்கு ஹிட்லர் அனுப்பிய செய்திக்கு மறுமொழி. ஹிட்லர் பின்வருமாறு வேண்டினன்.

மத்யதரைக்கடலில் ஸிஸிலிக்கு எதிர்த்தாப்போல் சமீபதூரத்திலிருக்கும் ட்யூனிஸ் என்னுமிடத்திலிருக்கும் பிஸெர்ட்டா என்னும் ஒரு துறைமுகத்தை ஜெர்மனிக்குக் கொடுக்கும்படிக்கும்.

மார்ஸெயில்ஸ் அல்லது லேன் என்ற இடங்களுக்கு ஆக்ரமணம் செய்யப் படாத பிரெஞ்சு தேசமார்க்கமாக ஜெர்மன் துருப்புகளைக் கொண்டுபோகப் பாதை யும், பிரெஞ்சுக் கப்பல்களைக்கொண்டு பிஸெர்ட்டாவுக்கு துருப்புகளும் யுத்த தளவாடங்களும் கொண்டுபோக அனுமதிக்கவும்.

இந்த வேண்டுகோளுடன் வாய்மொழியாக ஒரு எச்சரிக்கையையும் ஹிட்லர் அனுப்பினன். அதாவது, இந்த விருப்பங்களுக்கு பிரான்ஸ் இணங்காவிட்டால், மூன்று நாள்களுக்குள் நிறைவேற்றக்கூடிய ஒரு உத்தரவு எழுத்து மூலமாய் அனுப்பப்படுமென்று. அந்த உத்தரவுப்படி மூன்று நாள்கள் கடந்தவுடன் ஜெர்மன் துருப்புகள் பிரான்ஸின் பாக்கி நாடுகளையும் ஆக்கிரமித்துவிடும்.

பிரான்ஸில் இப்பொழுது ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அநேகர் எந்த சமயத்திலும் ஜெர்மனி உட்புகுந்துவிடுமோ என்று எதிர்பார்க்கிறார் கள். தளகர்த்தர் மாக்ஸிம் வேகாண்டு (Maxime Weygand) வாரக்கடைசியில் ஒலிபரப்பியது ஜனங்களைத்தயாராகவிருக்கும்படி எச்சரிக்கிறதென்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இந்த ஒலிபரப்பில் வட-ஆப்பிரிக்காவிலுள்ள ஜனங்களுக்கு, புதிய பிரான்ஸோ கக்ஷியோடு ஒத்துழைக்கும்படிக்கும், தங்கள் தலைவர்களை நம்பும் படிக்கும், தப்பான தகவல்களை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும் வேண்டப் பட்டது.

ஆனல், எனக்குக்கிடைத்த தகவல்களிலிருந்து இதுவரையில், மூன்று நாள் கெடுக்கண்ட ஒரு உத்தரவை ஹிட்லர் அனுப்பவில்லை. ராஜ தந்திரகோஷ்டிகள் அந்தவிதமாக ஒரு மிரட்டலான செய்தியை அனுப்ப ஹிட்லர் துணியமாட்டா னென்று கருதுகின்றன. குடியரசு நாடுகளையும் கடற்படையையும் அச்சுநாடு களுக்கு எதிர்முகமாக யுத்தம்செய்ய ஏற்பாடுசெய்வோமென்று பொருள்படும் படியான பிடேனுடைய பதில் வாஸ்தவமானது. எளிதில் பிடேனல் நிறை வேற்றக்கூடியது. இந்த அபாயத்தை விலக்குவாங்க ஜெர்மானியர்கள் ஆசைப் படமாட்டார்கள்.

இந்தச் சிக்கலிலிருந்து தப்பிக்க ஹிட்லர் செய்த உபாயமென்னவென்றால், மேலே சொல்லிய உத்தரவை வாய்மொழியாக அனுப்பியதுதான். இம்மாதிரியான எச்சரிக்கையை இதற்குமுன் இரண்டு சந்தர்ப்பங்களில் ஹிட்லர் பிடேனுக்கு அனுப்பியிருக்கிறான். சமீபகாலத்தில் பிரெஞ்சுக் கடற்படையைத் தன்னிடம் ஒப்புவிக்கும்படி ஹிட்லர் வேண்டிக்கொண்டான்.

பிரெஞ்சுக் கடற்படை பிரெஞ்சுக்காரர்களுடைய பழைய நேசநாடுகளோடு ஒருபொழுதும் யுத்தம் செய்யாது என்று பகிரங்கமாக மார்ஷல் பிடேன் பதில் விடுவித்தான்.

பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிரிடையாக மறுபடியும் யுத்தத்தை ஆரம்பிப்பதில் ஜெர்மனிக்கு அநேக கஷ்டங்கள் ஏற்படக்கூடியதாயிருந்தபோதிலும், ஹிட்லருக்கு ஒரு இடுக்கான தருணம் ஏற்படக்கூடும். அதாவது, இதாலி தோற்றுவிட்டால் மத்யதரைக்கடல் பிரதேசத்தில் அச்சுநாடுகளின் அதிகாரம் ஒழிந்துவிடக்கூடிய அபாயம் நேர்ந்துவிடும். அப்பொழுது இதாலிக்குச் சொந்தமான கடற்படைகளை உபயோகப்படுத்தி விமானப்படையின் ஒத்தாசையுடன் பிஸெர்ட்டாவை எதிர்த்து அதைக் கைப்பற்றிக்கொள்ள ஹிட்லர் பிரயத்தனம் செய்வான்.

---

## கதம்பம்.

---

1. "நம்முடைய விமானப்படையின் சங்கியையை பலப்படுத்த நாம் இனி கவனம் செலுத்தவேண்டியதில்லை. புதிய தினுசு விமானங்களைக்கட்டவும், அதிகதூரம் பறந்து செல்லவும், அதிகமாக அடிக்கக்கூடிய சக்தியைப்பெறவும், அதிக உயரத்தில் பறக்கவும், வேகமாக துரத்தியடிக்கவும் வேண்டிய சாதனங்களை ஏற்பாடுசெய்கிறோம்."

(பிரிடனுடைய விமான பலத்தைப்பற்றி விமான உற்பத்தி இலாகா மந்திரியாகிய பீவர்ப்ரூக் பிரபு, பிப்ரவரி 23).

2. "மிஸ்டர் சர்ச்சிலின் தலைமையின் கீழ் சுதந்திரத்தை நிலை நாட்ட செய்யப்படும் இந்த யுத்தத்தில் நாம் சேர்ந்து கொள்வது நமக்குப் பெருமை."

(பீவர்ப்ரூக் பிரபு, பிப்ரவரி 23).

3. "அநியாய மார்க்கத்தைக் கைப்பிடித்துவரும் வல்லரசர்களுக்கும் நியாயமார்க்கத்தை அவலம்பித்திருக்கும் வல்லரசர்களுக்கும் ஒருக்காலும் சமாதானம் ஏற்பட முடியாது. நாம் மசண்டையான ஒரு நிலைமையை விரும்பவில்லை."

(மிஸ்டர் R. G. மென்ஸீஸ், ஆஸ்திரேலியா பிரதமமந்திரி, பிப்ரவரி 23).

4. "அமெரிக்கா தேசத்தின் உற்பத்தி நிலைமை அதிகரிக்க அதிகரிக்க ஹிட்லரின் தோல்வியின் சமீபம் நெருங்கிவிடும்."

(மிஸ்டர் ஹென்ரி வாலஸ், வைஸ் பிரஸிடெண்ட், பிப்ரவரி 22).

5. "லிபியாவிலுள்ள இதாலிய சைனியங்கள் கட்டுக்கதையான ஒரு சரித்திரத்தை எழுதிக்கொண்டிருக்கிறார்கள்."

(முஸோலினி, பிப்ரவரி 23).

6. "ஆஸ்திரேலியர்கள் செலவைப் பொருட்படுத்தவில்லை. இந்தச் சுடுபந்தயத்தில் எவ்வளவு நஷ்டமடைந்தாலும் பாதகமில்லை. நாம் தோல்வியடைவதைக் காட்டிலும் நஷ்டமடைவது நலம்."

7. "இதுதான் வாஸ்தவமான புது அரசியல் திட்டம். நெருங்கி இணைக்கப்பட்ட சகோதரபாவத்துடன் இந்த பயங்கரமான ஆபத்தைத்தாண்டி பிரிடிஷ் சாம்ராஜ்யமும் நாகரீகமும் நீடித்து வாழும் படிக்கும், மனிதர்களின் ஜீவனையே அழித்து விடமுயலும் இந்தக்கேவலமானதும், கெடுதல் விளைவிக்கக்கூடியதுமான ஒரு கொள்கையை அடக்கிவிடுவதும்தான்."

(யுத்த இலாகாவின் பார்லிமெண்டிலிருக்கும் இரண்டாவது ஸெக்ரடரி ஆப் ஸ்டேட், லார்டு கிராப்டு, பிப்ரவரி 20).

8. "ஆபிரிகாவில் நமக்குக் கிடைத்த வெற்றிகள் மின்னல் போன்றவைகளல்ல."

(மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர், கடற்படை முதல் பிரபு, பிப்ரவரி 18).

9. "மதராஸ் ஜனங்கள் சாம்ராஜ்ய சரித்திரத்தில் மிகவும் கௌரவமாக நடந்து கொள்ளுகிறார்கள்."

(பீவர்ப்ரூக் பிரபு, பிப்ரவரி 19).

10. "பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் அபிவிருத்திக்கும் மேன்மைக்கும் காரணபூதமான கொள்கைகளாகிய, நியாயம், மனிதர்களின் சுதந்திரம், பொறுமை பாராட்டல், சுயஆக்ஷி ஆகிய இந்த நோக்கங்களை நிலைநாட்ட நாம் யுத்தம் செய்கிறோம்."

(மிஸ்டர் எல். எஸ். அமெரி, இந்தியாவின் ஸெக்ரடரி ஆப் ஸ்டேட், பிப்ரவரி 24).

11. "சர்ச்சிலின் கடைசி வேண்டுகோள் கவனிக்கப்படாமல் போய்விடும் என்று அவர் ஒருபொழுதும் பயப்படவேண்டாம்."

(நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை, பிப்ரவரி 10).

12. "பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் கவர்ன்மெண்டாரின் சார்பாக பிரசாரம் செய்யும் ஒரு கருவியாக இருக்க நாம் விரும்பவில்லை."

(மிஸ்டர் டப் கூபர், அறிக்கை மந்திரி. காமன்ஸ் சபையில் நடந்த விவாதத்தில், பிப்ரவரி 6).

13. "ஜெர்மனியிலுள்ள ஒவ்வொருவருக்கும் அபாயம் நேரிட்டிருக்கிறது."
(ஜெர்மன் விமானப்படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஜெனரல் மில்ச் என்பவர் பெர்னிலிருந்து ஒலிப்பரப்பியது. பிப்ரவரி 7).

14. "சென்ற யுத்தத்தில் பிரிடிஷ் விமானப்படைக்கு ட்ரென்சார்ட் பிரபு விடுவித்த பழமொழியைப்போல், ஜெர்மனியிலிருக்கும் ஜெர்மானியர்களைத் தாக்குவதுதான், இப்பொழுதும் பிரிடிஷ் விமானப்படையின் நோக்கம்."
(ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர், விமான இலாகா மந்திரி, பிப்ரவரி 25)

15. "யுத்தத்தில் வெற்றியடைய ஏற்பாடு செய்வதுதான் நமக்கு முதல் நோக்கம்."
(பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், பிப்ரவரி 25).

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கத்தைப்பற்றி.

பிப்ரவரி 10-ம் தேதியன்று பிரிடிஷ் மக்களுக்கும், பிரிடிஷ் சாம்ராஜ்ய வாசிகளுக்கும் மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கம் உத்ஸாகத்தைக்கொடுத்தது. ஆனால், அதைப்பற்றி மறுநாள் ஜெர்மன் ரேடியோ செய்த வியாக்கியானங்கள் முன்னுக்குப்பின் விரோதமாயிருந்தன. 'மிஸ்டர் சர்ச்சிலின் பேச்சு பிரிடிஷார்களுக்கு தைரியத்தைக்கொடுக்காது', என்று பகல் 12-30 மணிக்கும், 'அமெரிக்காவைக் கெஞ்சினது நெஞ்சைப்பிளக்கிறது' என்று பகல் 1-15-க்கும், 'மிஸ்டர் சர்ச்சிலின் பிரஸங்கம் சப்த ஆடம்பரத்தோடு இருந்ததோடு, வெற்றி வரும் நம்பிக்கையோடும் செய்யப்பட்டிருக்கிறது' என்று மாலை 7-30 மணிக்கும், முன்பின் விரோதமாய் ஜெர்மன் வியாக்கியானங்கள் வெளிவந்தன.

ஜெர்மன் விமானப்படைக்குச்சமானமாக எதிர்காலத்தில் கூட பிரிடிஷ் விமானப்படை பலப்படாதென்று நினைக்கும் படியாக மிஸ்டர் சர்ச்சில் சொல்லி விட்டதாகவும் 12-30-மணிக்கு ஜெர்மன் ஒலிபரப்பு பிரஸ்தாபித்தது.

என்ன விந்தை! ஜனவரி 28-ம் தேதியன்றுதான் ஜெர்மனியின் கப்பற் படைத்தலைவர், 'இனி பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனிக்குள் புகுந்து, முன்னை விட அதிகமாகச்சேதம் செய்யப்போகின்றன. இதை ஜெர்மன் விமானங்களால்

தடுக்க முடியாது' என்று துறைமுகத் தொழிலாளிகளுக்கு எச்சரிக்கை செய்தார். மேலும், பிப்ரவரி முதல் தேதியன்று ஜெனரல் மில்ஷ் என்பவர், 'பிரிடிஷ் வெடி விமானங்கள் இரவில் ஜெர்மனியைப் படையெடுப்பதைத்தடுக்க உபாயமொன்றும் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை' என்று ஜெர்மானியர்களுக்கு மறு எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

## வில்கி, ஹாப்கின்ஸ் அபிப்பிராயங்கள்.

மிஸ்டர் வில்கி, மிஸ்டர் ஹாப்கின்ஸ் என்ற அமெரிக்கர்கள் சமீபத்தில் பிரிடனைப்பார்த்துவிட்டுத் திரும்பிப்போனவர்கள். இவர்கள் பிரிடனுக்கு அனுகூலமாக அபிப்பிராயம் கொடுத்திருந்தால் அதை மிஸ்டர் சர்ச்சில் உடனே தன் பிரஸங்கத்தில் சொல்லியிருப்பாரென்றும், அப்படி சொல்லாததிலிருந்து அவர்கள் நல்ல அபிப்பிராயம் கொடுக்கவில்லை என்றும் ஜெர்மன் ரேடியோ கூறுகிறது.

ஆனால், இவர்களிருவரும் நல்ல அபிப்பிராயங்கள்தான் கொடுத்திருக்கிறார்கள்.

பிப்ரவரி 11-ல் மிஸ்டர் வில்கி சொல்லியது :—

பிரிடனைப்படையெடுத்து ஜெர்மனிக்கு வெற்றி வரப்போவதில்லை. வியாபாரக்கப்பல்கள் போக்குவரத்து நிற்காது. பிரிடிஷ் வடபுறத்திலிருக்கும் துறைமுகங்கள் அடைபடாதிருந்தால், வரப்போகும் வஸந்த, கோடைகால, எதிர்ப்பை பிரிடன் தாங்கிக்கொள்ளும். பிறகு வெற்றி பிரிடனுக்கு வந்துவிடும்.

பிப்ரவரி 16-ல், மிஸ்டர் ஹாப்கின்ஸ் சொல்லியது :—

பிரிடனை ஹிட்லரால் தோற்கடிக்க முடியாது. அமெரிக்காவின் உதவியைக் கொண்டு பிரிடன் நிச்சயமாக ஜயிக்கும். இரு திறத்தாருக்கும் வெற்றியில்லாதபடி முடியாது.

## மால்டாவைப்பற்றிய பொய்.

அச்சு நாடுகள் ஆசைப்படுகிற காரியங்கள் நடந்து விட்டதாகச்சொல்லிக் கொள்ளுகின்றன. குரூஸர்கப்பல்கள் பிரிடனுக்கு உள்ளதைக்காட்டிலும் அதிகமாக உடைந்து விட்டதாக, சென்ற வருஷம் சொல்லப்பட்டது. லண்டன் அடியோடு அழிந்து விட்டதாக ஸெப்டம்பரில் சொல்லப்பட்டது. இப்பொழுது (பிப்ரவரி 12-ல்) 'விமானப்போரால் மால்டா தீவானது முதல் வகுப்பு யுத்தக் கப்பல் துறையென்ற அந்தஸ்தை இழந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.'

ஜெர்மனியும், இதாலியும் சேர்ந்து இது வரையில் 400 தடவை எதிர்த்தும் மால்டாவின் உபயோகம் குறையவில்லை. கடைசியாக நாஸிகள் பழுது செய்து விட்டதாகச் சொல்லிக்கொண்ட இல்லஸ்டிரியஸ் என்ற விமானமேற்றிச்செல்லும் கப்பல் மால்டாவில் பழுது பார்க்கப்பட்டு ஒரு மணிக்கு 23 நாட் அல்லது கடல் மைல்கள் வீதம் வேகமாய் ஓடி அலெக்ஸாண்டிரியாவைச்சேர்ந்து விட்டது.

மால்டா வாஸிகளுக்கு அச்சு நாடுகள் பின்வருமாறு இந்தியாவைப்பற்றி ஒலிபரப்பியிருக்கின்றன:—"இந்தியாவில் பிரிடிஷ்காரர்கள் கைதிகளாக பாவிக்கப்படுகிறார்கள். அவர்கள் வசிக்கும் வீட்டு ஜன்னல்களுக்கெல்லாம் இரும்புக்கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. அஸ்தமித்தால் போக்கு வரத்து நின்று விடும்; ஐரோப்பியர்கள் வீட்டை விட்டுக்கிளம்பமாட்டார்கள்."

## துணையோடு செல்லும் கப்பல்களுக்கு நஷ்டம்.

சமீபத்தில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் நடந்த எதிர்ப்பில் பிரிடிஷ் துணைகொண்டு சென்ற 14 கப்பல்களைக்கவிழ்த்து விட்டதாக நாஸிகள் பிரமாதமாய் ஆர்பாடம் செய்கிறார்கள். உள்ளபடி 6 கப்பல்கள் தான் முழுகிப் போயின. பத்திரமாய்த் துறைமுகம் சேர்ந்த மற்ற நாலு பிரிடிஷ், இரண்டு கிரேக்க கப்பல்கள் பெயர்கள் கூட விளம்பரம் செய்தாய் விட்டது.

நேயக்கப்பல்களுக்கும், நடுநிலை நாட்டுக்கப்பல்களுக்கும் நடுக்கடலில் சம்பவிக்கக்கூடிய அபாயம் பிரிடனுக்குத்தெரியாமலில்லை: அப்பேற்பட்ட நஷ்டத்தையும் ஏற்பட்டபோது, இது வரையில் பிரசுரப்படுத்தாமலுமிருந்ததும் இல்லை. இரண்டு மாதங்களுக்குள் பிரிடிஷ் வியாபாரக்கப்பல்களை நிர்மூலமாக்கி விடப்போவதாக ஜெர்மனி 1940, ஆகஸ்ட் 7-ம் தேதி சொல்லிக்கொண்டது. இது வரையில் ஒன்றையும் காணோம். ஏதோ 6 கப்பல்கள் முழுகிவிட்டதைப் பற்றி ஆர்ப்பாட்டம் செய்வதிலிருந்து இவர்கள் பேச்செல்லாம் வீண்பேச்சென்றும் இவர்கள் ஆசைவீணாயிற்று என்றும் தெரிகிறது.

## வெகு தூரங்களில்.

அநேக சமுத்திரங்களிலெல்லாம் பிரிடிஷ் துணையைக் கொண்டு கப்பல்கள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன; ஜெர்மன் கப்பல்களுக்கோ, பால்டிச், கருங் கடல்களைத்தவிர வேறு கடல்களில் ஓட முடியாது. 10,00,000 டன் நிறை கொண்ட 233 இத்தாலிய, ஜெர்மானிய கப்பல்கள், ஜெர்மனிக்குத் திரும்ப முடியாது நடுநிலைத் துறைமுகங்களில் அடைபட்டுக்கிடக்கின்றன. திரும்பப் பிரயத்தனம் செய்த கப்பல்களில் ஐந்து கப்பல்கள் தாமாகவே கவிழ்த்துக் கொண்டன. ஒருகப்பலாவது ஜெர்மனிக்குத் திரும்பவில்லை.

பிரிடனுக்குப்பயந்து வெளிநிற்கும் அச்சு நாட்டுக்கப்பல்களின் தொகுதியும், அவைகள் ஒளிந்திருக்கும் இடங்களும் பின்வருமாறு:—

| | | ஜெர்மன் கப்பல்கள். | இதாலிய கப்பல்கள். |
|---|---|---|---|
| யுனைடட்ஸ்டேட்ஸ்-அமெரிக்கா | ... | 2 | 26 |
| பிரஸீல் | ... | 8 | 16 |
| ஆர்ஜண்டைன் | ... | 3 | 17 |
| மற்ற தென்-அமெரிக்கத்துறைமுகம் | | ... | ... |
| ஸ்பெயின் | ... | 31 | 12 |
| கானரி தீவுகள் | ... | 5 | 13 |
| அஸோர்ஸ் | ... | 1 | ... |

## சீதோஷ்ணஸ்திதிதான் காரணமாம்.

இதாலி தோற்றுப்போகும் போதெல்லாம் சீதோஷ்ணஸ்திதியை இதாலி குற்றம் கண்டு பிடிக்கிறது. ஜிரேனேவாவை பிரிடன் எதிர்த்ததற்குக்காரணம் மூடுபனியாம்; சென்ற ஜூன் மாதத்தில் இதாலி யுத்தத்தில் பிரவேசித்த போது, ஒப்பந்தம் முடியும் வரையில் மூடுபனி ஆல்ப்ஸ் போர்முனையைவிட்டு அகலவே இல்லையாம்; வட ஆபிரிக்காவில் சண்டை செய்யும் போது குடிக்க ஜலமில்லையாம்; கிரீஸ் யுத்தத்தில் சிப்பாய்கள் நிற்கத் தோண்டப்பட்ட பள்ளங்களில் ஜலம் நிரம்பி விட்டதாம். ஆனால் இவர்களுக்குப் பக்கத்தில் கிரேக்கர்கள் நின்ற பள்ளங்களில் ஜலத்தைக் காணேம். டிஸம்பர் 22-ல் ஏட்ரியாடிக்கடலில் பிரிடன் படையெடுத்த போது சீதோஷ்ணஸ்திதி மறுபடியும் கெட்டுவிட்டதாம்; அப்படிக்கில்லாத பக்ஷத்தில் இதாலிய கப்பற்படை எதிர்த்திருக்குமாம்.

## பெங்காஸியைப்பற்றிய புதுப்புளுகு.

சீதோஷ்ணஸ்திதி என்ற சாக்கை அடிக்கடி சொல்லி அலுத்துப்போய், இதாலிய துருப்புகளைத்தப்பிவிப்பதற்காக பெங்காஸியை விட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால், நினைத்த இந்தக் காரியம் பலிக்கவில்லை. ஏனென்றால், பெங்காஸி பிடிபட்டதும், ஸிரெநெயிகாவிலிருந்த 15,000 சைனியமும் சரணாகதியடைந்து விட்டது.

---

# B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

## ருமேனியா ஒரு ஜெர்மன் ராணுவ நிலையமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

ருமேனியாவில் பிரிடிஷ் தூதராக இருந்த ஸர் ரெஜினால்ட் ஹோரை பிரிடனுக்குத் திருப்பியழைக்கப்பட்டதிலிருந்து ஜெர்மன் புது-அரசியலுக்கு பிரிடன் கீழ்ப்படிய நேர்ந்து விட்டதாக ஜெர்மனி சொல்லுகிறது (பிப்ரவரி 12-ம் தேதி ஒலிபரப்பு). ஆனால் அவர் திரும்ப நேரிட்டதற்குக் காரணம் ருமேனியா ராணுவஸ்தலமாக்கப்பட்டதுதான். புது அமைப்பிலிருந்து ருமேனியா கொள்ளையடிக்கப்பட்டு, கலகங்களுக்கும் இரையாகிவிட்டது.

## அமெரிக்கர்களின் அபிப்பிராயம் மாற்றிச்சொல்லப்படுகிறது.

இங்கிலாந்து தோற்று விடப்போவதாக அமெரிக்கர்களின் அபிப்பிராயமென்று தெரிவதாக ஒரு ஜெர்மன் பத்திரிகை சொல்லுவதாக இந்துஸ்தானியில் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. பிரிடனுக்குக்கடன் கொடுக்கும் குத்தகைக்கு விடும் மசோதா ஸெனட் அயல் நாட்டுக்காரியக்கமிட்டி அங்கீகாரம் செய்துகொண்டதிலிருந்து பிரிடனுக்கு சீக்கிரத்தில் உதவி செய்ய அமெரிக்கா தீர்மானித்தது வெளியாகிறது.

## பிரிடனுக்குப்போயிருக்கும் இந்தியத் தொழிலாளிகளைப்பற்றி.

இந்தத் தொழிலாளிகளுக்கு பிரிடிஷ் தொழிலாளிகளைக் காட்டிலும் கூலி குறைத்துக்கொடுப்பார்களென்றும், ஆனால் அவர்களைவிட அதிகமாக வேலை செய்யச் சொல்லப்படுவார்களென்றும் ஜெர்மனி சொல்லுகிறது. (பிப்ரவரி 13-ஒலிபரப்பு). ஆனால், உண்மையில், பிரிடிஷ் தொழிலாளிகளுக்கும், இந்தியத் தொழிலாளிகளுக்கும், கூலியும், வேலை நேரங்களும் ஒன்றுதான்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXXIII.—(திருத்தப்பட்டது).

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| மார்ச்சு ... | 1, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை. | கீரனூர் ... | காலை | 9.30 |
| | | நாஞ்சூர் ... | ,, | 9.45 |
| | | திருவப்பூர் ... | மாலை | 5.00 |
| | 3, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.25 |
| | | செம்பாட்டூர் ... | மாலை | 5.00 |
| | | ஒடையாளிப்பட்டி ... | ,, | 5.45 |
| | 4, செவ்வாய்க்கிழமை. | விராலிமலை ... | ,, | 5.30 |
| | 5, புதன்கிழமை ... | பனையப்பட்டி ... | ,, | 5.00 |
| | | ராங்கியம் ... | ,, | 5.30 |
| | 6, வியாழக்கிழமை ... | புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம். | ,, | 3.30 |
| | 7, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |

## பிரஸங்கம் XXXIV.

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச்சு ... | 8, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 9, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் ... | காலை | 9.30 |
| | | குடுமியாமலை ... | ,, | 9.45 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | 10, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.25 |
| | | திருமயம் ... | மாலை | 5.30 |
| | | கோனாபட்டு ... | ,, | 6.00 |
| | 11, செவ்வாய்க்கிழமை. | நச்சாந்துபட்டி ... | ,, | 5.30 |
| | | விராச்சிலை ... | ,, | 6.00 |
| | 12, புதன்கிழமை ... | புதுப்பட்டி (பொன்னமராவதி). | ,, | 5.30 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 6.00 |
| | 14, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—1-3-41.